# மன்னா


"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உடலும், ஒரே உயிருமாய் இருந்தனர்."
(திருத்தூதர் பணி 4 : 32)

விலை ரூபா 12.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 15 | ஆடி, 2002 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 85

மன்னார் மறை மாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


மடுத்திருப்பதியின் இவ்வாண்டு ஆடித் திருவிழாவில் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதியினர்.



மடுத்தாயாரின் திருச்சுருபத்தை பரிபாலகர் ஸ்ரனி பிலிப் அடிகளார் தேரில் வைப்பதற்காக எடுத்து வருகின்றார்.



திருச்சுரூபத்தை தாங்கிய தேர்ப்பவனி ஆரம்பமாகிறது.



தேர்ப்பவனியில் பங்கெடுக்கும் குருக்கள் தேரின் முன்னே அணிவகுத்து பக்தியாகச் செல்கின்றனா.

### மடுத்திருவிழாவின்போது புலிகள் வரி அறவிட்டார்கள் என்ற

## தவறான பத்திரிகைச் செய்திக்கு

## மன்னார் ஆயர் மறுப்பு!

## சண்டே லீடர் பத்திரிகைக்கு பதில் கடிதம்

ஆடி 7ந் திகதி சண்டே லீடர் (Sunday Leader) என்ற ஆங்கிலப் பத்திரிகையில் திரு. இஸ்மாயில் அபேவிக்ரம என்பவரால் எழுதப்பட்ட மேற்படி செய்தி தொடர்பாக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் விளக்கக் கடிதம் ஒன்றை சண்டே லீடர் பத்திரிகையின் பதிப்பாசிரியருக்கு அனுப்பியுள்ளார். அதில் மடுத்திருவிழாவிற்கு மடுறோட் வழியாகத் தமது சொந்தப் பாவனைப் பொருட்களுடன் வந்தவர்களிடமிருந்து விடுதலைப்புலிகள் எவ்வித வரியும் அறவிடவில்லை எனவும் எந்தவிதமான பணமும் அவர்களிடமிருந்து சேகரிக்கவில்லை எனவும் தெளிவு படுத்தியுள்ளார். (அக்கடிதத்தின் முழு விபரத்தையும் பக்கம் 7ல் காணலாம்)

## கொழும்பு மறைமாவட்டத்திற்கு புதிய பேராயர்



கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய பேராயராக மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் திருத்தந்தையினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு மறைமாவட்டத்தின் 8வது பேராயராவார். இவர் 11 மறைமாவட்டங்களை உள்ளடக்கிய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைமை ஆயராகவும் விளங்குவார். 75 வயதை அடைந்த பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தமது இராஜினாமாக் கடிதத்தை திருத்தந்தைக்கு கையளித்ததையடுத்து இந்த புதிய நியமனத்தை திருத்தந்தை அவர்கள் மேற்கொண்டுள்ளார். ஆயர் ஒருவர் தமது 75 ஆவது வயதில் தமது ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெறவேண்டும் என்று திருச்சபையின் சட்டத்தொகுப்பு கூறுகின்றது. ஆடி 27 ம் திகதி புதிய பேராயரின் பணியேற்பு வைபவம் கொழும்பு மறைமாவட்டத்தின் பேராலயமாகிய கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் இடம்பெறும். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

### அ.ம.தி. களின் யாழ் மாகாண நிதிப்பொறுப்பாளராக

## C. S. குருஸ் அடிகளார் நியமனம்



அமல மரித்தியாகிகளின் (O.M.I) யாழ் மாகாண நிதிப்பொறுப்பாளராக அருட்பணியாளர் C.S. குருஸ் அடிகளார் நியமனம் பெற்றுள்ளார். வங்காலை மண்ணின் மைந்தனாகிய இவர் மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். மடுப் பரிபாலகராகவும், பேசாலை பள்ளிமுனை பங்குகளின் பங்குத்தந்தையாகவும், மன்னார் மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். அதன் பின்னர் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தில் சில ஆண்டுகள் பங்குப்பணி புரிந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் அடிகளார் செய்த அன்புப்பணியை நன்றியோடு நினைவு கூருகின்றோம். அடிகளாரின் புதிய பணி சிறக்க மன்னார் இறைமக்களின் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் அன்போடு தெரிவித்து நிற்கிறது.

### கார்மேல் சபையின் புதிய தலைவி

## அருட்சகோதரி வின்சன்ற்

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபையின் உலகளாவிய மேனிலைத் தலைவியாக அருட் சகோதரி எம். வின்சன்ற் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மே மாதம் இடம்பெற்ற விஸ்தரிக்கப்பட்ட பொதுச்சங்கத்தில் அருட்சகோதரி வின்சன்ற் அவர்கள் தெரிவாகியுள்ளார். இரண்டாவது முறையாக சபையின் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள அருட்சகோதரியை மன்னா வாழ்த்தி நிற்கிறது.

### திருக்குடும்ப சபையின் புதிய தலைவி

## அருட்சகோதரி முல்டீன்

திருக்குடும்ப கன்னியர் சபையின் புதிய தலைவியாக அருட்சகோதரி மாக்கிறட் முல்டுன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மே 12ம் திகதி உரோமில் நடைபெற்ற விஸ்தரிக்கப்பட்ட பொதுச்சங்கத்திலேயே இந்தத்தெரிவு இடம்பெற்றது. இவர் ஐரிஸ் நாட்டைச் சேர்ந்தவர். முன்னாள் தலைவி அருட்சகோதரி ஜோய் அவர்கள் புற்றுநோயினால் காலமானதைத் தொடர்ந்தே இப்புதிய நியமனம் இடம்பெற்றுள்ளது. புதிய தலைவியின் பணி சிறக்க மன்னா வாழ்த்தி நிற்கிறது.

### அன்னை திரேசாவின் பெயரில்

## விமான நிலையம்



அல்பேனிய நாட்டின் விமான நிலையம் அன்னை திரேசாவின் பெயரில் இயங்கத் தொடங்கியுள்ளது. அல்பேனிய இனத்தவரான அன்னையின் பெயரில் இந்த விமான நிலையத்தை பெயர் மாற்றிய வைபவத்தில் உரையாற்றிய அல்பேனிய முதல்வர் பண்டெலி மாஜ்கோ, அன்னையின் அன்புச் செயல்களையும் ஆளுமையையும் அவர் பிறந்த நாட்டில் மதிக்கும் ஒரு செயலாக தலைநகர் ரிரானாவில் இதுவரை காலமும் அமைந்திருந்த றினாஸ் விமான நிலையத்தை அன்னை திரேசா சர்வதேச விமான நிலையமாக மாற்றியுள்ளதாகத் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

### தலைமன்னாரில்

## தெய்வீகத் தென்றல்

கடந்த ஆனிமாதம் 9ந்திகதி தொடக்கம் 14ந்திகதி வரையிலான 5 நாட்கள் தலைமன்னார் பங்கில் "பொப்புயலர் மிசன்" (Popular Mission) என்று அழைக்கப்படும் பங்குப் புதுப்பித்தல் தியானம் இடம்பெற்றது. இந்தியாவின் டிவைன் இல்ல தியானக் குழுவினர் அருட்பணியாளர் அகஸ்டின் முண்டேகாட், அருட்பணியாளர் யோசவ், சகோ. ஜோர்ஜ் தரகன் ஆகியோர் இதில் பங்கெடுத்தனர். இந்தியாவில் வின்சன்சியார் சபைக் குருக்களால் பங்குகளில் நடாத்தப்படும் இத்தியானம் இந்தியாவிற்கு வெளியே உலகிலேயே முதன் முதலாக மன்னார் மறைமாவட்டத்தில் தலைமன்னார் பங்கிலேயே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். இத்தியானங்கள் பற்றிய சிறப்பு விபரங்களை பக்கம் 5ல் காணலாம்.



அருட்பணியாளர் அகஸ்ரின் முண்டேகாட்



அருட்பணியாளர் யோசவ்



சகோ. ஜோர்ஜ் தரகன்

## மடுத்திருவிழாவிற்காக மடு றோட் திறக்கப்பட்டது

மடுத்திருப்பதியின் ஆடி 2, ஆவணி 15 திருவிழாக்களை கருத்திற்கொண்டு நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த மடு வீதி ஆனி மாதம் 20ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக திறந்து வ்வக்கப்பட்டது. மதவாச்சி - மன்னார் வீதியிலிருந்து மடுத் தேவாலயத்திற்குச் செல்லும் மடு றோட் என்று அழைக்கப்படும் மடு வீதியே இவ்வாறு திறக்கப்பட்ட வீதியாகும். உள்துறை அமைச்சர் ஜோண் அமரதுங்க, புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோர் ஒன்றாக நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாக இப்பாதையைத் திறந்து வைத்தனர்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

*"நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள் .... புகழ்ந்து ஏத்துங்கள்" (திருப்பாடல் 81: 1 )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு

# பதிப்பாசிரியர் பகர்வது

வணக்கம்

## பத்தாண்டுப் பணிபற்றிய பார்வை !

சுற்றும் வரைதான் பூமி! சுழலும் வரைதான் பந்து! போராடும் வரைதான் மனிதன்! வாழ்வு என்பது போராட்டம். அதுவும் தமிழ் மண்ணில் வாழ்வு என்பது சாதாரண போராட்டமல்ல. அது ஜீவ மரணப் போராட்டம! யுத்தததின் சத்தங்கள் மத்தியில் மனித அவலங்கள் நிறைந்த ஓர் காலப்பகுதியில் மன்னார் திருச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று 10 ஆண்டுகளை (1992 - 2002) நிறைவுசெய்கிறார் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை. இம்மண்ணின் ஆன்மீக, சமூக, அரசியல் வாழ்வில் ஆயரின் பணி ஆழமானது, அற்புதமானது. இத்துறைகளில் ஆயரின் தாகத்தையும் வேகத்தையும் சோகத்தையும் இங்கே சுருக்கமாக சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றோம்.

### ஆழம்மிக்க ஆன்மீக அலைகள்

ஆன்மீகம் என்பது ஓர் தேடல். ஆன்மீக வாழ்வு என்பது ஓர் தொடர் பயணம். உண்மைக் கிறிஸ்தவத்தை வாழ்வாக்க ஆதிக்கிறிஸ்தவர் வாழ்வின் வேர்களை ஆயர் தேடிச் சென்றார். அதன் விளைவு அன்பியங்கள் அரும்பியது. இறைவார்த்தை, செபம், அன்புச் சமூகம் (அன்பியம்) என்ற 3 தூண்களில் கிறிஸ்தவ வாழ்வை நிலைநிறுத்தப் பாடுபட்டார். இறைவார்த்தை விதையை இம்மண்ணில் விதைக்க டிவைன் தியானக் குழுவினர் போன்ற பலர் அழைத்துவரப்பட்டு குருக்களுக்கும் இறைமக்களுக்கும் வார்த்தை விதை விதைக்கப்பட்டது. இன்னும் புதுப்பித்தல் தியானங்கள், வழிபாடுகள் ஊடாக இறைமக்களின் செபவாழ்வு ஆழப்படுத்தப்பட்டது. வார்த்தை விதை விதைக்கப்பட்டு செபம் மூலம் அது வளர்க்கப்பட்டு அன்புச் சமூகம் (அன்பியம்) என்ற அறுவடையாக அது மலர்ந்துகொண்டிருக்கிறது.

### மேலெழுந்த புதிய அமைப்புக்கள்

இறைமக்களை ஆன்மீக ரீதியில் கட்டியெழுப்பிய அதேவேளை பல்வேறு அமைப்புக்களும் (Structures) ஏற்படுத்தப்பட்டன. மறைமாவட்டத்தில் பல புதிய ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. பல புதிய பங்குகள் உதயமாகின. பல புதிய ஆலயங்கள் - பல பங்கு மனைகள் தோற்றம் பெற்றன. பல பொதுநிலைப் பணியாளர்கள் பங்குகள் தோறும் மேலெழுந்தனர். ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் மறைமாவட்ட மேய்ப்புப்பணி திட்டமிடல் மாநாடுகளை நடாத்தி மேய்ப்புப்பணித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இத்திட்டங்கள் கிரமமாக பங்கு மட்டங்களில் படிப்படியாக செயலாக்கப்பட்டன.

### சமூக மேம்பாடு நோக்கி

ஆயரின் அயராத முயற்சியினால் பல சமுக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மறைமாவட்டத்தின் மனித முன்னேற்ற சமூக அபிவிருத்தி மையமாகிய வாழ்வுதயம் அமைப்பின் மூலம் இத்திட்டங்கள் செயலாக்கப்பட்டன. முன்பள்ளிகள், பாடசாலை பிள்ளைகளுக்கான கல்வி உதவி, உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவி, மருத்துவ உதவி, நிவாரணப் பணிகள் என்று பல்வேறு உதவித்திட்டங்கள் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களும் மக்களும் ஆண்டுதோறும் பயன்பெறுகின்றனர். துன்புறும் மக்களின் துயரக் கதைகளைக் கேட்கும்போது ஆயரின் கண்கள் குளமாகும்! இதயம் பற்றியெரியும்!. அக்கறையுள்ள நல்ல ஆயனாக தன் அன்பு மக்களின் துயர் துடைத்தார்.

### குரலற்ற மக்களின் குரல்

ஆயர் அவர்கள் யுத்தத்தை என்றுமே நாடியவரல்ல! மக்களின் சமாதான வேட்கையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிரொலித்தார். அவர் குரலற்ற மக்களின் குரலாக ஒலித்தார். "சர்வதேசமே இங்கு ஒரு தேசம் படும் அவஸ்தையை பார்" என்று சர்வதேச சமுதாயத்தின் மனச்சாட்சியை உலுப்பினார். மனித உரிமை மீறல்களை துணிவோடு அம்பலப்படுத்தினார். சிங்கள அரசியல் தலைவர்களையும் பௌத்த துறவிகளையும் சிங்கள ஆயர்களையும் தமிழ் மண்ணுக்கு அழைத்து வந்தார். யுத்தத்தின் விளைவுகளை அவர்களே பார்த்து விளங்கும்படி செய்தார். அகதி முகாம்களின் அவலநிலை கண்டு திடுக்கிட்டோம் என அவர்கள் பின்னர் கருத்து வெளியிட்டனர். அவலப்படும் மக்களின்மேல் உலகத்தின் பார்வையைத் திருப்பி சமாதானத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்தினார்.

### சிலுவையின் வழியில் தொடரும் பயணம்

காய்க்கின்ற மரத்திற்குதான் கல்லெறி என்பார்கள். சமாதானத்திற்கான அவருடைய அதீத ஈடுபாட்டின் நிமித்தம் அவர் விமர்சிக்கப்பட்டார். குறிப்பாக சிங்கள பேரினவாத சக்திகள் பத்திரிகைகள் வாயிலாக அவருடைய கருத்துக்களை திரித்துக் கூற முற்பட்டன. மறைமாவட்டத்தில் நிகழ்ந்த சோக நிகழ்வுகள், குடும்ப இழப்புக்கள், சுகவீனங்கள் இவை அனைத்தின் மத்தியிலும் ஆயர் அவர்களின் பயணம் சிலுவையின் வழியில் தொடர்கிறது. பத்தாண்டுகளை நிறைவு செய்யும் ஆயர் பெருந்தகைக்கு மன்னார் இறைமக்கள் சார்பாக மன்னா மகிழ்வான வாழ்த்துக்களையும் செபங்களையும் கூறி நிற்கின்றது. **Ad Multos Annos**

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
இறையாசீர். அன்புடன்,
அருட்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்

# மறைமாவட்ட செய்திகள்

தாழ்வுபாட்டில்

## புதிய கன்னியர் இல்லக் கட்டடம்

தாழ்வுபாட்டுப் பங்கில் பணி செய்து வரும் திருச்சிலுவை கன்னியர்களுக்கான புதிய கன்னியர் இல்லக் கட்டிட திறப்புவிழா ஆனி மாதம் 22ம் திகதி இடம் பெற்றது. மன்னார் ஆயர் யோசப் ஆண்டகை அவர்கள் இப்புதிய கட்டிடத்தை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.

## மன்னார் மறைமாவட்டம் இரண்டாவது இடம

கறிற்றாஸ் "செடேக்' நிறுவனத்தினால், அகில இலங்கை ரீதியில் மறைமாவட்டங்களுக்கிடையில் நடாத்தப் பெற்ற "சமாதானத்திற்கான புதிய உதயம்" நாடகப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட 11 மாவட்டங்களின் நாடகங்களில், சிலாபம் மறைமாவட்டம் 1வது இடத்தினையும், மன்னார் மறைமாவட்டம் 2வது இடத்தினையும், கொழும்பு மறைமாவட்டம் 3வது இடத்தையும் பெற்றுக்கொண்டன. மன்னார் வாழ்வுதயம் நிறுவனம் மறைமாவட்ட மட்டத்தில் நடாத்திய நாடகப் போட்டியில் 1ம் பரிசைத் தட்டிக் கொண்ட வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலை அணியினர், அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பெற்ற போட்டியில் 2வது, இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தையும். ரூபா 7,000/= பணப்பரிசிலையும் பெற்று எமது மறைமாவட்டத்துக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள். மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களை வாழ்வுதயம் வாயார வாழ்த்துகின்றது. இவ்வாழ்த்தில் மன்னாவும் இணைந்து கொள்கிறது.

நானாட்டானில்

## புதிய பங்குமனை

நானாட்டான் பங்கில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்ட பங்குமனைத் திறப்புவிழா ஆனி மாதம் 23ம் திகதி இடம் பெற்றது. மன்னார் ஆயர் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக புதிய பங்குமனையை திறந்து வைத்தார். நானாட்டான் பங்கின் முன்னாள் பங்குத் தந்தை அருட்பணியாளர் றெஜினோல்ட் அடிகளார் இப்புதிய பங்கு மனைக்கட்டிட வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

தற்போதைய பங்குத் தந்தை செபஸ்ரியான் குரூஸ் அடிகளார் இந்த வேலைகளை நிறைவு செய்தார். உதவிப் பங்குத் தந்தை அருட்பிரகாசம் அடிகளார் பங்குத் தந்தையர்களோடு இணைந்து கட்டிடவேலையை பூர்த்திசெய்ய முன்னின்று உழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மரியாயின் சேனை ஆச்சேஸ் விழா

இந்த ஆண்டுக்கான மரியாயின் சேனையாரின் உள்தியானமும் ஆச்சேஸ் விழாவும் மே மாதம் 10, 11, 12 ஆகிய திகதிகளில் வவுனியா இறம்பைக் குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெற்றது. மன்னார், முருங்கன், வவுனியா, மறைக்கோட்டங்களில் உள்ள சகல பிரசீடியங்களிலும் இருந்து 300 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இத்தியானத்தை இயேசு சபை அகதிகள் பணியகத்தின் இலங்கைப் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள இந்தியாவைச் சார்ந்த அருட்திரு வின்னி ஜோசப் அடிகளார் நடாத்தினார்.

தங்கள் ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்து மரியாயின் சேனையில் இருந்து புதிய உத்வேகத்துடன் பணியாற்ற இத்தியானம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்ததென இதில் பங்கு பற்றியோர் கருத்துத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வுக்கான போக்குவரத்து மற்றும் இதர எற்பாடுகளை மன்னார் கொமிசிய தலைவர் திரு. மரியதாசன் பீரிஸ் அவர்களும் ஆன்ம இயக்குனர் அருட்திரு விக்டர் சோசை அடிகளாரும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்:
து. எட்னா பற்றீசியா.
கொமிசிய செயலர்.

# வாசகர் எண்ணங்கள்



## வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி

மன்னா தன்னகத்தே சுமந்து வரும் எல்லா விடயங்களும் தரம் வாய்ந்தவை. சிறிதாக தொடங்கிய மன்னாவின் பணி இன்று எல்லா இடங்களிலும் தனது சேவையை செய்து வருவதை காணும்பொழுது அதன் பிரியர்களாகிய நாங்கள் மகிழ்கின்றோம். மாதம் ஒரு முறை மலர்ந்தாலும், அதன் வரவை தினமும் எதிர்பார்க்கின்றோம். என்றும் மன்னாவின் பணி சிறக்க உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

எஸ். கே. பெகின், புனித கிளராட் சபை, நீர்கொழும்பு.

## மன்னாவின் மகிமை

கிறிஸ்தவர்களாகிய எமக்கு மன்னா ஓர் முக்கிய செய்தித்தாள். மாதத்தின் ஒரு முறை மிகவும் அழகான கருத்துக்களையும் பல செய்திகளையும் தாங்கி வரும் சுவையான தாள். எமது வாழ்க்கையை வாழ்வாக்குவதற்கும் ஆழப்படுத்துவதற்குமான வாழ்க்கையின் தாள். செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் பகிர்வின் தாள். மன்னாவே! ஓடி ஓடி வருவாய் நான் சுவைக்க! வாழ்க வாழ்க உனது பணி!

சீ. சந்தியோகு (ஜெயந்தன்) வஞ்சியன் குளம், வங்காலை.

## 'மன்னா' இதழில் வாழ்வுதயம்

வாழ்வுதயம் சம்பந்தமான நிகழ்வுகள் பலவற்றையும் கடந்தமாத மன்னா பத்திரிகையில் அழகுற பிரசுரித்தமைக்காக எமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம். இறையாசீர் வேண்டி,

யேசுறாஜா அடிகளார், இயக்குனர், வாழ்வுதயம், மன்னார்.

## குறுக்கெழுத்துப்போட்டி வரவேற்கத்தக்கது

குறுக்கெழுத்துப்போட்டி மன்னாவில் வெளிவருவது வரவேற்கத்தக்க ஓர் விடயம். இப்போட்டி விவிலியத்தை வாசிக்கத் தூண்டுவதுடன் ஆவலுடன் விடைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தை மனதிற் கொண்டு நேரத்தை அதில் செலவிடுவதற்கும் ஓர் சந்தர்ப்பமாக அமைகின்றது. எமது மக்களுக்கு விவிலிய அறிவு போதாமல் இருப்பதனால் விவிலியத்தை வாசிக்கின்ற பழக்கத்தை இப்போட்டி மூலம் ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

சீ.எஸ்.எஸ். குரூஸ் (ஸ்ரீமதி) கோயில் வீதி, உயிலங்குளம்.

## அனைத்து வயதினருக்கும் ஏற்ற பத்திரிகை

தங்கள் மன்னா பத்திரிகையை படிக்கும் சந்தர்ப்பம் எதிர்பாராத விதமாகக் கிடைத்தது. உண்மையில் 'மன்னா' பத்திரிகை மிகவும் தரமுள்ளதாகவும் அனைத்து வயதினருக்கும் ஏற்ற ஒரு மறைப் பத்திரிகையாகவும் உள்ளது. அண்மையில் வெளிவந்த ஒரு சில மன்னாவையே படிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு முன் வெளிவந்த பல மன்னா பத்திரிகைகளைப் படிக்காது இழந்த சந்தர்ப்பத்தையிட்டு மிகவும் கவலையடைகின்றேன்.

மன்னா பத்திரிகை என்றும் தனது தனித்தன்மையை இழக்காது இன்னும் இன்னும் பல புதியவைகளுடன் வெளிவந்து புதிய இறையரசைக் கட்டும் பணியில் என்றும் நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக!

இப்படிக்கு, மன்னாவின் தோழமையுள்ள
**A. M.** மஞ்சுரிக்கா, பிறேமஸ்ரன்
நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம்.

## மூப்பர் குடும்பம் ............




(நன்றி – தொடுவானம்)

## புனிதர் பொன்மொழி

"தீமையானதை செய்யாமலிருந்தால் மட்டும் போதாது. நன்மையானதை செய்யாமலிருப்பதும் தீமையே" புனித அத்தனாசியுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா படச்சிறப்பிதழ்

## மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆயர் பணியேற்று

# பத்தாண்டுகள் நிறைவில்! பணிபற்றிய பதிவுகள்!

## 1992 - 2002

*மிக்க தாழ்மையுடன் ஊழியம் செய்ய..*




உரோமில் முன்னாள் ஆயரும் இன்னாள் ஆயரும்! ஆயர் தோமஸ் ஆண்டகை மன்னார் ஆயராக நியமிக்கப்பட்ட செய்தி வெளியிடப்பட்ட அன்று. 1981ல்



ஆயர் நியமனச் செய்தி அதிகாரபூர்வமாக ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் அறிவிக்கப்படுகிறது. 1992ல் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் ஆலயத்தில்



ஆயர் அபிசேகத் திருப்பலியில் அன்றைய திருத்தந்தையின் பிரதிநிதியுடன் அமர்ந்திருக்கின்றார். 1992ல் மடுவில்



கடல் பயணத்தின் களைப்பு! கவனமாக தாயக மண் நெடுந்தீவில் காலடி பதிக்கின்றார்.




இரண்டு அப்பாவிப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயர்-2001ல் மன்னார்



வன்னி அகதி முகாம் ஒன்றில் அந்தரிக்கும் மக்களோடு அளவளாவும் காட்சி



முழங்காவில் சிறுவர் இல்லத்தில் அனாதைக் குழந்தை ஒன்றை அன்போடு தூக்கி அரவணைக்கின்றார்.



வன்னியில் பேராயர் சகிதம் விடுதலைப்புலிகளை சந்திக்கின்றார். 2001ல்



தமிழ்ச் செல்வனுடன் ஆயர்கள்! வன்னியில் விடுதலைப் புலிகளை சந்திப்பதற்காக ஆயர்களை அழைத்து வந்தபோது 2001ல்



சமதான யாத்திரை மேற்கொண்டு கோவா சென்ற வேளை தன் குரு நண்பனால் வரவேற்கப்படுகிறார்



சமாதானப் பயணமாக வெளிநாட்டில்! பனிவிழும் குளிர் நாட்டில் விலங்கோடு விளையாட்டு!



பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என ஆயர்கள் சகிதம் விடுதலைப் புலிகளிடம் வன்னியில் வினயமாய் வேண்டுகிறார்!



மன்னார் ஆயர் இல்லத்தின் அருகே உள்ள பட்டித்தோட்டம் செபமாலைத்தாசர் கன்னியர்களுடன்



கோவாவில் உள்ள யோசவ் வாஸ் திருத்தலத்தில் செபிக்கின்றார்



குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று



ஆற்றங்கரையில் நின்று ஆழமான சிந்தனை! ..... நாட்டுப் பிரச்சினை எப்போது தீருமென்றா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## கவிதைப் பூக்கள்

### பள்ளிக் கூடம்

உன் இதயம் ஒரு பள்ளிக்கூடம் - அதில்
என் இதயம் ஒரு மாணாக்கன் இயேசுவே.

தாழ்ச்சி என்பதே முதல் பாடம் - அதில் -
வளர்ச்சி காண்பதே மனப்பாடம்
சாந்தம் கொள்வதே வீட்டுப் பாடம் - அதில்
சாந்தி காண்பதே வெற்றியாகும்.

அன்பு என்பதே எழுத்தாகும்.
பிறர் அன்பு செய்வதே சொல்லாகும்.
பகைமை மறப்பதே பொருளாகும்.
இறை பாசம் வளர்ப்பதே நயமாகும்.

அ. றோகினி, தரம் 11
பொன்தீவுகண்டல், (அளவக்கை)

### உயிர் நட்பு

பணத்தைக் கண்டு வருவது நட்பல்ல
பாசத்தைக் கண்டு வருவதே நட்பு
பள்ளி முடியும்வரை வருவது நட்பல்ல
இறைவனை அடையும்வரை வருவதே நட்பு
நண்பனின் உயிரை எடுப்பது நட்பல்ல
நண்பனுக்காக உயிர் துறப்பதே நட்பு

மகிழ்வில் மட்டும் பங்கெடுப்பது நட்பல்ல
துக்கத்திலும் பங்கெடுப்பவதே நட்பு.
பேசாதிருந்தால் புரியும் நட்பு
பேசிக்கொண்டிருந்தால் ஏற்படும் வெறுப்பு.

மொரின் தர்மினி , தரம் 9,
புனித சவேரியார் பெ. தேசிய கல்லூரி,
எமில் நகர் , மன்னார்.

### பூட்டன் சொத்து

காகம் கரைகிறது கருக்கல் விடிகிறது
சேவல் கூவி சிகப்பு மலர் விரிகிறது
அடுப்புக் கட்டில் அம்மா புட்டவிக்க
சுருக்கு வலையை சுமக்கின்றார் அப்பா
பாயை நனைத்த பச்சை குழந்தைத் தம்பி
வாயை அசைத்து ஏதோ
வசை எனக்குச் சொல்லுகின்றான்
நாட்கள் நகர்ந்தன. நானும் வளர்ந்தேன்..!.
ஒருநாள் வீட்டில் கிடந்ததொரு
பையைத் திறந்து பார்த்தேன்
பேரன், பூட்டனெல்லாம்
பேணிவந்த பைபிளொன்று
கறையான் அரித்து அங்கே
கரைந்துபோய் இருக்கக் கண்டேன்.

சா. குயின்சி மொறாயஸ்
ஆண்டு - 06, அரிப்பு, முருங்கன்.

# சிறுவர் தொடர் கதை

## புனித லொயலா இஞ்ஞாசியார்

அங்கம் 14



53. [illegible]

54. [illegible]

55. இயேசு சபையினரின் விருதுவாக்கு "ஆண்டவரின் அதி மிக மகிமைக்காக" என்பது. இதை இலத்தின் மொழியில் AMDG என்று சுருக்கிச் சொல்வது வழக்கம்.(Ad Majorem Dei Gloriam) எல்லாம் இறைவனின் மகிமைக்கே, எதுவும் அயலாரின் நன்மைக்கே என்பது புனித இஞ்ஞாசியாரின் மனத்தில் எழுந்த பெருமைமிகு எண்ணம். இதை இயேசு சபையினரின் வழியாக செயலாற்ற விரும்புகின்றார்.

56. புனித இஞ்ஞாசியார் இளம் உள்ளங்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவர்களுக்காக பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்தினார். இதற்குப் பரிசாக இறைவன் இயேசுசபையில் இளைஞர் ஒருவரைப் புனிதராக ஆக்கினார். அவர் பெயர் புனித ஞானப்பிரகாசியார் - இளைஞரின் பாதுகாவலர். பின்னர் இந்தியாவிற்கு வந்த இயேசு சபையினர் இந்தியாவில் பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஆரம்பித்து இறைபணியாற்றி வருகின்றனர். (முற்றும்)

**எதிர்பாருங்கள்**

*அடுத்த மன்னாவில் புதிய சிறுவர் தொடர்கதை ஆரம்பமாகிறது!*

# மோட்சத்தில் மூன்று அதிர்ச்சிகள்

**பேராயர் புள்ரன் ஜே. சீன (Fulton J. Sheen)**

முதலாவதாக மோட்சத்தில் பிரவேசிக்கவே மாட்டார்கள் என நான் எண்ணிய ஒரு சாராரை அங்கு காண்பேன்.
இரண்டாவதாக, மோட்சத்தில் இருப்பார்கள் என நான் எதிர்பார்த்த ஒரு சிலரைக் காண முடியாது.
மூன்றாவதாகவும் பேரதிர்ச்சியாகவும், கடவுளின் பேரிரக்கத்தில் வைத்த நம்பிக்கையால் நான் அங்கு இருப்பேன். - வின்சன்ட் டலிமா, தலைமன்னார்.

## மடுத்திருப்பதிக்கு ....10ம் பக்கத் தொடர்ச்சி

1. திருப்பதியின் புனிதத்தன்மையை பேணும் நோக்குடன் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்க.
2. மடுத்திருப்பதி பரிபாலகரின் கட்டளைகளை பணிவுடன் ஏற்று அவரது அறிவுரைகட்கேற்ப நடந்து கொள்க.
3. திருப்பதியில் மரியாதைக் குறைவான உடைகளை அணியாது, மரியாதையான உடைகளை அணிந்து கொள்க.
4. தேவாலயத்தில் பெண்கள் முக்காடிட்டு வழிபாடுகளில் கலந்து கொள்க.
5. திருப்பதியின் எல்லையை விட்டு வெளியேறாது கவனமாக இருக்கவும்.
6. திருப்பதியில் உள்ள மரங்களுக்கு சேதம் விளைவிக்காது பார்த்துக்கொள்ளவும்.
7. தேவையற்ற சம்பாஷனைகளில் இருந்து விலகிக் கொள்ளவும்.
8. உங்களுக்குரிய பொருட்களை பாதுகாத்துக் கொள்ளவும்.
9. நீங்கள் தங்கியிருக்கும் இடத்தை மிகவும் புனிதமாக வைத்திருக்கவும், குப்பை கூளங்கள், பாவித்த நீர் போன்றவற்றை அதற்குரிய இடத்தில் கொட்டவும்.
10. எந் நேரமும் ஏனையோருக்கு இடையூறாக இராது மற்றவர்களுடன் அன்புடனும், சமுக மனப்பான்மையுடனும் நடந்து கொள்ளவும்.

## தமிழ்த் திருச்சபை.... 10ம் பக்கத் தொடர்ச்சி

என்னைப் பொறுத்தவரை மனிதாபிமான சேவைகள், கண்டிப்பு அறிக்கைகள் என்பனவற்றிற்கு அப்பால் சென்று திருமறை நீதிக்காகவும், அமைதிக்காகவும் நேரடிப் பங்களிப்பு செய்ய வேண்டும். மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற இனப் பாகுபாடுகள் மத்தியில் அரசியலில் பாராமுகமாக ஒதுங்கியிருந்த திருச்சபையினர் 1983 இனக்கலவரங்களின்பின் சில அறிக்கைகளை விடுத்ததோடு மனிதாபிமான சேவையையும் வழங்கத் தொடங்கினர். எல்லாப் பௌத்தர்களும் சிங்களவர்களாகவும் எல்லா இந்துக்களும் தமிழர்களாகவும் இருப்பதனால் கிறிஸ்தவர்கள் மட்டுமே சிங்களவர்களையும் தமிழர்களையும் கொண்டுள்ள மறைக்குழுவாகும். உலகத் திருச்சபை என்ற நிலையில் பல வளங்களோடு அமைதியான இணைந்த ஒரு நாட்டினை உருவாக்க உதவும் சிறப்பு நிலையில் திருச்சபை இருந்ததெனினும் தான் ஒரு சிறுபான்மை அமைப்பு என்ற எண்ணமும், அந்நிய ஏகாதிபத்தியத்தின் வழிவந்தவர்கள் என்ற எண்ணமும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அல்லது இனங்களிடையே புரிந்துணர்வை வளர்க்கும் செயல்களில் ஈடுபடாது தள்ளியே இருந்தது.

1983 இனக்கலவர நிகழ்வுகளும் தங்கள் ஆலயங்கள், பாடசாலைகள் குண்டுவீசி அழிக்கப்பட்ட நிகழ்வுகளும் மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்த நிலையும் திருமறையினரை செயற்பட வைத்தன. ஆயினும் தங்கள் சகபாடிகளின் பங்களிப்பு பெருமளவில் இல்லாமலே அச்செயற்பாடுகள் அமைந்திருந்தன. தென்பகுதி திருச்சபை வடகிழக்கில் அரச படைகளின் அத்து மீறல்களை நம்ப மறுத்தன. திருச்சபையின் 'ஐக்கியம்' என்பது 8 சிங்கள ஆயர்களும் 3 தமிழ் ஆயர்களும் கூடும் ஒரு சந்திப்பாக மட்டுமே இருந்தது. பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும், திருச்சபைத் தலைவர்களும் நாட்டில் கிறிஸ்தவர்கள் பாதுகாப்பாக இருந்தால் அது ஒன்றே போதும் என்ற நிலையில் இருந்தனர். சிங்களவர்கள் மத்தியில் இருந்த திருமறைத் தலைவர்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள் என்று சொல்லப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்திலும் தமிழ் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்களென முத்திரை பொறிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்திலும் அமைதி காத்து பாரபட்சமில்லாக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். ஆயர் அவையின் ஒன்று கூடல் பொதுவில் போரையும் வன்செயலையும் கண்டித்து ஏனோதானோ என்ற அறிக்கைகளை மட்டும் வெளியிட்டது. போரினதோ பயங்கரவாதத்தினதோ அடிப்படைக் காரணத்தையிட்டு எதுவும் செய்யவில்லை என அடிகளார் அப்பேட்டியின்போது குறிப்பிட்டார்.

## திருமண பொன்விழா

# வாழ்த்து

பொன் விழாத் தம்பதிகள்
பாக்கியம் ஜோண் பறுனாந்து
சந்தியா மேரி மிராண்டா
1952.08.18 - 2002.08.18



பேசாலை எம்பதியில் பேர்பூத்த குடும்பங்களில்
உதித்த எம் பெற்றோரே
எங்கள் பெட்புநிறை தவத்தோரே
உங்களை நாம் வாழ்த்தி ஏத்தியே போற்றுகிறோம்.

ஐபத்து ஆண்டுகளாய் அன்புற் றமர்ந்த இல்வாழ்வில்
அருமைச் செல்வங்கள் பதின்மூன்றைப் பெற்றே நீர்
பெருமையுடன் சீராட்டிப் பேர் சொல்ல வாழவைத்தீர்.

பொன்விழாக் காணுமிந் நந்நாளில்
பிள்ளைகள் நாம் கூடியே வாழ்த்துகிறோம்
இந்நாள் வரைகாத்த நம் இறைவன்
இன்னும் பல்லாண்டு காக்கவென
வேண்டிநிதம் அவன் பாதம் போற்றி
வாழ்த்துகிறோம் வாழிய வாழியவே!

வாழ்த்துவோர்
சகோதரர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# சிரிப் 'பூ' க்கள்



ராமு : சோமு இந்த உடுப்பு பொங்கலுக்கு வாங்கினதா?
சோமு : இல்ல ... ராமு. இது எனக்கு வாங்கினது.
ராமு : .......... ???

***

ஆசிரியர் : ராமு தெரியும் என்பதன் எதிர்க்கருத்து என்ன?
ராமு : தெரியாது சார்.

***

ஆசிரியர் :- ஜதீஸ் ஒண்ணும் ஒண்ணும் எவ்வளவுடா?
ஜதீஸ் :- இந்த சின்னக் கணக்கக்கூடத் தெரியாமலா வாத்தியார் வேலைக்கு வந்தீங்க!

***

கமல்:- வள்ளுவர் குறளை எழுதினதால அதற்குத் திருக்குறள என்று பெயர் வந்திடிச்சு. அதுவே அவர் மனைவி வாசுகி எழுதியிருந்தா என்னான்னு பெயர் வந்திருக்கும்?
விமல் :- தெரியலையே
கமல் :- திருமதி குறள்.

அனுப்பியவர்
ச. டிலோஜன், சிறிய குருமட வீதி, மன்னார்.

தொண்டன்: வன்முறையை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் நடத்தலாம் என்று இருக்கின்றோம் தலைவா.
தலைவர்: அப்படியா? நல்ல விசயம்தான். எதுக்கும் பாதுகாப்பிற்காக ஆயுதங்களையும் எடுத்துட்டுப் போங்க.
தொண்டன்: ???

***

நீதிபதி: நீங்க இந்தக் கொலையை நேர்ல பாத்தீங்களா?
ஒருவர்: இல்லீங்க! சைட்ல நின்னுதானுங்க பாத்தேன்.

***

கமல்: பொங்கல் சிறப்புத் தள்ளுபடியில் ஸ்கூட்டர் வாங்கினீங்களே. இப்ப என்னாச்சு?
விமல் :- ஸ்கூட்டர் இப்போ 'தள்ளும்' படி இருக்கு!
கமல் : ????

அனுப்பியவர்
செ. றொக்சி., ஆண்டு - 9
(திருப்பாலர் சபை) கோமரசன் குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருகின்றோம்! வருகின்றோம்! வாழ்வைத் தேடி வருகின்றோம்!

# தலைமன்னாரில் இறைவார்த்தைத் திருவிழா

கடந்த ஆனிமாதம் 9ந்திகதி தொடக்கம் 14ந்திகதி வரையிலான 5 நாட்கள் தலைமன்னார் பங்கில் ஆன்மீக அருட்சியின் நாட்களாக அமைந்திருந்தது, 'இயேசுவே ஆண்டவா'', "இயேசுவே மீட்பா", "வருகின்றோம் வருகின்றோம் வாழ்வைத் தேடி வருகின்றோம்'' போன்ற கோசங்கள் வானலைகளில் எதிரொலிக்க ஒவ்வொரு வலயம் வலயமாக திருத்தந்தையின் கொடிகளை பிடித்துக்கொண்டு மக்கள் பவனியாக வந்தார்கள்.

"பொப்புயலர் மிசன்" (Popular Mission) என்று அழைக்கப்படும் இந்த பங்குப் புதுப்பித்தல் தியானத்தை இந்தியாவின் டிவைன் இல்ல தியானக் குழுவினர் அருட்பணியாளர் அகஸ்டின் முண்டேகாட், அருட்பணியாளர் யோசவ், சகோ. ஜோர்ஜ் தரகன் ஆகியோர் மிகச் சிறப்பாக நெறிப்படுத்தினர்.

இந்தியாவில் வின்சன்சியார் சபைக் குருக்களால் பங்குகளில் நடாத்தப்படும் இத்தியானம் மன்னார் மறைமாவட்டத்தில் தலைமன்னார் பங்கில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தியானம் மன்னார் குருக்கள் மூலம் எதிர்வரும் காலங்களில் ஏனைய பங்குகளிலும் நடாத்தப்படும். இத்தியானத்தின் இறுதி நாள் அன்று ஆயர் அவர்கள் தலைமன்னாருக்கு வருகை தந்து அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் வழங்கினார்.

"மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு" (மாற். 5: 34)

## ஆண்டவர் செய்த பல அற்புதங்களின் சில பதிவுகள்

### வயிற்றில் குத்து வேதனை! பூரண சுகம் பெற்றேன்

எனது பெயர் செல்வறாஜா மரிய வசந்தி (வயது 27) கடந்த 6 மாதங்களுக்கு மேலாக வயிற்றின் மேல் பக்கம் ஒரே குத்து வேதனை. தாங்க முடியாத வலி. வயிறு வெடிக்கப்போவது போல இருக்கும். நான் கருவுற்று இருந்ததால் குழந்தை கிடைத்தவுடன் இந்த வருத்தம் சரியாகப் போய்விடும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். வவுனியா வைத்தியசாலைக்கு போய் காட்டியபோது படம் எடுத்துப் பார்க்க வேண்டும் என்றும் அதற்காக 1 மாதத்தின்பின் வரவேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கிடையில் இந்தத் தியானம் நடந்தது. 3வது நாளில் வயிற்றுக்குள்ளே சரியான வலி. இருந்தும் தியானத்திற்கு வந்தேன். நற்கருணை எழுந்தேற்றம் நேரம் நான் மயங்கி விழுந்து விட்டேன். அதன் பிறகு அந்தக் கட்டி இருந்த அடையாளமும் இல்லை, வலியும் இல்லை. பூரண சுகம் பெற்றுள்ளேன். ஆண்டவருக்கே நன்றி.



திருமதி செல்வறாஜா மரிய வசந்தி

### சுகமாக இருதய சத்திர சிகிச்சை நடந்தது

பேசாலையைச் சேர்ந்த பி. அலோய் டயஸ் றோகினி பர்னாந்து தம்பதிகளின் 1 1/2 வயதுக் குழந்தை அ. அஜய் டயஸ்சுக்கு பிறப்பில் இருந்தே இருதயத்தில் உள்ள இரண்டு நரம்புகள் ஒட்டியிருந்ததால் இந்தக் குழந்தை எப்போதுமே சோர்ந்து – வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது.

சத்திர சிகிச்சைக்காக பல தடவைகள் கொழும்புக்கு கொண்டு சென்றபோதும் சத்திர சிகிச்சை நடக்கவில்லை. இக் குழந்தையுடைய தகப்பனின் அக்காவாகிய நான் (அலோசியஸ் அகஸ்ரா டயஸ்) தலைமன்னாரில் நடந்த தியானத்தின்போது இக் குழந்தைக்காக அழுது செபித்தேன். நல்ல முறையில் சத்திர சிகிச்சை இடம் பெற வேண்டுமென மன்றாடினேன். அதன்படி 2 வாரங்களுக்கு முன்னர் எவ்வித ஆபத்தும் இன்றி சுகமாக சத்திர சிகிச்சை இடம்பெற்றது. ஆண்டவருக்கே மகிமையும் புகழும். அல்லேலூயா!



அலோசியஸ் அகஸ்ரா டயஸ் அவருடைய அண்ணனின் குழந்தையுடன்

### நெஞ்சு நோ - மறைந்தது

எனது பெயர் அ. எட்வேட் கூஞ்ஞு என்னை எல்லோரும் ராஜன் என்று அழைப்பார்கள் (27 வயது) கடந்த ஒரு மாதத்திற்கு முதல் நான் சைக்கிளால் விழுந்து எனது நெஞ்சும் விலாவும் அடிபட்டது. ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் காட்டியபோது ஈரல் வீக்கம் என்று சொன்னார்கள். டொக்டரிடம் காட்டியபோது 10 ஊசி போட்டார். அதற்கும் எனக்கு சுகம் கிடைக்கவில்லை. இருமும்போது நெஞ்சை பிடித்துக் கொண்டுதான் இருமுவேன். குடல் அறுந்து விழுந்துவிடுமோ என்று உணர்வேன். அவ்வளவு நோ. ஆனால் தியானத்தின்போது - ஒருவர் ஒருவர் மீது கை வைத்து செபித்த வேளை நான் சத்தம் போட்டு செபித்தேன். அந்த வேளை சுகத்தை உணர்ந்தேன். இப்போது இருமும்போது எந்த வலியும் இல்லை. இதற்கு முதல் நான் தொழிலுக்கு போவதில்லை. கிணற்றில் நீர் முதலாய் அள்ளிக் குளிக்க முடியாத நிலையில் இருந்தேன். இப்போது எனது கடமைகளை நான் நன்றாகச் செய்கின்றேன். இயேசுவே உமக்கு நன்றி.



திரு, அ. எட்வேட் கூஞ்ஞு

### மனநோயின் தாக்கத்தில் இருந்து விடுதலை

எனது பெயர் செ. மரியை (62) கடந்த 30 வருடங்களாக நான் மன நோயினால் பாதிக்கப்பட்டிருந்தேன். பிள்ளைகள் எனது விருப்பப்படி நடவாமல் இருக்கும்போது - எனது சொல்லை மீறி நடக்கும் போது எனக்கு தலை விறைப்பு ஏற்பட்டு இந்த மனநோய் அதிகரிக்கும். போன வருடம் ஆவணி மாதம் காய்ச்சலும் இருமலும் இருந்து 5 மாதங்களாக அதை நான் தாங்கிக்கொண்டேன். தை மாதம் என்னால் ஏலாமல் போய்விட்டது. வருசத்திற்கு ஆசீர்வாதம் போட வந்தவர்களை நான் கலைத்து விட்டேன் அந்த 5 மாதங்களும் நான் கோயிலைத் தவிர வேறு எவருடைய வீட்டிற்கும் போகவில்லை.

ஆனால் இந்த தியானத்தின் பின்னர் இப்போது நான் நல்ல சுகமாக இருக்கின்றேன் - நானாக சமைத்து சாப்பிடுகின்றேன், பிள்ளைகளோடு உறவோடு இருக்கின்றேன்.



திருமதி செ. மரியை

(மிகுதி சாட்சியங்கள் அடுத்த இதழில் தொடரும். இதுபோன்ற சாட்சியங்களை இறைவனுக்கு புகழ்ச்சியாக நீங்களும் பகிர்ந்து கொள்ள விரும்பினால் உங்கள் பங்குத் தந்தையின் கையெழுத்துடன் உங்கள் சாட்சியங்களையும் புகைப்படத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள்- பதிப்பாசிரியர்)

## கடற்பயணம் - இது ஓர் உல்லாசப்பயணம் அல்ல
## உள்ளத்தை உருக்கும் பிரார்த்தனைக்கான பயணம்!

தியானக் குழுவினரும் அருட்பணியாளர்களும் தலைமன்னார் பங்கு மக்கள் சிலரும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பாக்கு நீரிணைக் கடலின் நடுவிலே உள்ள தீடை என அழைக்கப்படும் மண்புட்டிக்கு சென்று இலங்கைக்காவும் இந்தியாவுக்காகவும் செபிப்பதற்காக சென்ற கடற்பயணம்.



தீடைக்கு புறப்படுமுன்னர் தலைமன்னார் கடற்கரையில் அமர்ந்திருக்கும் காட்சி



அருட்பணியாளர்கள் மொண்டேகாட் சுஜித், யூட் குருஸ், டலிமா, ஆகியோர்



அருட்பணியாளர் யோசவ், சகோதரர் ஜோர்ஜ் ஆகியோர்



கடலின் நடுவே படகு பறக்கிறது....! படகில் சகோதரர் ஜோர்ச் பாடுகிறார்



தீடையை அடைந்த அகஸ்ரீன் அடிகளார் மகிழ்ச்சியில் கையசைக்கிறார்



தீடையில் அருட்தந்தையர்களும் மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாக் காணும்

# அருள்நிறை கன்னிமரி சபை

## Sisters of the Blessed virgin (1952 –2002)



அருள் நிறை கன்னிமரி சபை ஸ்தாபகர்
அன்னை லூசியா பெரேத்திரி

"ஆண்டவரே என் முழு உள்ளத்துடன் உம்மைப் புகழுவேன். உம் வியத்தகு செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்" (தி பாடல் : 9: 1)

அருள்நிறை கன்னியர் சபையானது அன்னை மரியின் நாமம் நானிலமெல்லாம் முழங்கிட இற்றைக்கு நான்கு நூற்றாண்டுகளாக எதுவித முறிவு தெறிவு இன்றி இன்னும் தனது பணியை உலகிற்கு, மரியாளைப் போன்று, மறைவாக தொடர்ந்தாற்றி வருகின்றது!

1610ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி வட இத்தாலி நாட்டின் கிறமோனா என்னும் நகரிலே லூசியா என்னும் அருட்சகோதரிக்கு கன்னிமரி காட்சி கொடுத்ததன் மூலம் உருவானதே இச்சபையாகும். சபையின் முக்கிய பணியாக அமைந்தது இளம் யுவதிகளின் கல்வித் திட்டமாகும். இவர்களது முதற்பணித்தள பரவலில் எம் தாய்த்திருநாடு (இலங்கை) முதலிடம் பெறுகின்றது.

1951ம் ஆண்டில் அதி வண. பெணாட் றெஞ்ஞோ (O.S.B) ஆண்டகை அவர்களால் கைவிடப்பட்ட அநாதைச் சிறார்களை பராமரிக்கும் பணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 1951ம் ஆண்டு தை மாதம் கடல் மார்க்கமாக, தங்களது பயணத்தை தொடங்கிய அருட்சகோதரிகள் விக்டோறியா முறண்டோஸ், அடேல்லேருறினோ ஆகிய இருவரும் மார்கழி மாதம் 25ம் திகதி கிறிஸ்து பிறப்பு விழாவன்று எம் மண்ணில் காலடி எடுத்து வைத்தனர்.

இவர்கள் மறினோ அருட்சகோதரிகளின் உதவியுடன் வைகாசி மாதம் 23ம் திகதி ஆன்மேரி, பெனாட் என்னும் இரு சிறார்களோடு மத்திய மலைநாட்டிலே கண்டி மாநகரிலே தமது பணியைத் தொடங்கினர்.

தேவதாய்க்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதமாகிய வைகாசி மாதத்திலே அன்றைய கண்டி மாவட்ட ஆயரான அதிவண பெணாட் றெஞ்ஞோ ஆண்டகை அவர்களால் சம்பிரதாய பூர்வமாக 24ம் திகதி அன்று இவர்களின் சிறு வீடு ஆசீர்வதித்து ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த பணிவாழ்வானது கண்டியில் இருந்து கம்பளைக்கு இடம் பெயர வேண்டியதாயிற்று. ஆகவே அருட்சகோதரிகள் மாதாவின் மாதமாகிய ஐப்பசி மாதம் 14ம் திகதியன்று ஏழு கைவிடப்பட்ட சிறார்களுடன் இடம் மாற்றப்பட்டு இன்று முதல் கம்பளையில் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுகளிலே பல மறைபரப்பு சகோதரிகள் வந்து நிறை பணியாற்றி இருக்கின்றனர். இவர்களில் மிக முக்கியமாக பெயர் குறிப்பிட்டு நினைவுகூரப்படவேண்டியவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் அருட்சகோதரிகளான றெடெந்தா, லூக்றேஷியா, ஒத்தாவியா, இவர்களுடன் இன்றும் எம்முடன் இருந்து தொடர்ந்தும் பணியாற்றும் இளைப்பாறிய மாகாணத் தலைவி அருட்சகோதரி கொஸ்ரான்டா அத்தார்தோவும், ஆன நெகேரி ஆகியோர்கள் ஆவர். இவர்கள் தமது முதிர் வயதிலும்கூட தங்கள் சொந்த நாட்டைவிட்டு எமது நாட்டுப் பணியை மிக விருப்புடன் செய்து வருகின்றனர்.

ஆல விருட்ஷமாக எமது சபை பரந்து, படர்ந்து விரியாவிட்டாலும், பணிவாழ்வுக்கான குழந்தைச் செல்வங்கள் பரந்து விரிந்த எமது நாட்டின் நாலா பக்கத்திலிருந்தும் எம்மை நோக்கி வருகின்றனர். இது இறை பராமரிப்பா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவற்றுடன் சுதேசிகள் பக்கம் எமது பார்வையை சற்றுத் திருப்பினால் அவிசாவளையை பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி ஒசிலியா சேனாபதியும் இரண்டாவதாக இரத்தினபுரி மேரி லூட்ஸ் அம்புகாமியுமே முதலில் சபையில் சேர்ந்து கொண்டனர். இதில் சிறப்புத்தன்மை என்னவென்றால் சபையில் - சேர்ந்த வரிசைப்படியே இருவரும் விண்ணக பேரின்பத்தை சுவீகரித்து கொண்டமையாகும்.

எமது இந்த ஐம்பது வருடகாலப் பயணத்தில் நிபந்தனையில்லா அன்பின் பெயரில் எம்மை வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். அவர் மகன் நாமத்தில் சேவையாற்றும் அருட்பணி. குருவானவர்கள், (யேசுசபைக் குருக்கள்) எமது மறைபரப்பு அருட்சகோதரிகள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர், அனைவருக்கும் இற்றைவரை எம்மோடு இருந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இவ்வேளையில் இறைசேவைக்குத் தேவையான நல்லுள்ளமும் விருப்பமுள்ள இளம் உள்ளங்களை இறைவாழ்வோடு ஒன்றுபட - எம்மோடு இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

தொகுப்பு - அருட்சகோதரி திரேசா அந்திரேஸ்.

# பங்குத் தள சங்கதிகள்

## பிச்ச குளம்

கடந்த 07. 05. 2002 அன்று பிச்ச குளம் புனித செபமாலை மாதா ஆலயத்திருவிழா ஆயத்த நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து மூன்று நாட்கள் வழிபாடுகள் நடைபெற்றன. 10ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.30 மணியளவில் புனித செபமாலை மாதா ஆலயத் திருவிழா பிச்ச குளம் கிராமத்தின் குருவாகிய அருட்தந்தை அவிதப்பு தலைமையில் முருங்கன் பங்குத் தந்தை தேவசகாயம்பிள்ளை, அருட் தந்தை ஸ்ரீபன் ராஜா, அருட் தந்தை செபஸ்ரியன் குரூஸ் ஆகியோருடன் நிறைவேற்றப்பட்டது.

அ. டிலைக்ஷன், பிச்சக்குளம்.

## வவுனியா

வைகாசி மாதம் 19 - 26 வரை நடைபெற்ற அன்பிய எழுச்சி வாரத்தையொட்டி வவுனியா பங்கிலுள்ள அன்பிய ஊக்குவிப்பாளர் ஒன்று சேர்ந்து வவுனியா பம்பைமடுவிலுள்ள அன்னை திரேசாவின் அன்பகத்தில் சிரமதானப் பணியொன்றை மேற்கொண்டனர். அங்குள்ள முதியோர்கள், சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களை கொடுத்து உதவியதன் மூலம் அன்பிய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கினர். வவுனியா பங்குத் தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளாரும் உதவிப் பங்குத் தந்தை பாக்கிய ரஞ்சித் அடிகளாரும் ஊக்குவிப்பாளர்களின் தலைவர் திரு. எஸ். டானியல் அவர்களும் இச்சிரமதானப் பணியில் முன்னின்று வழிநடத்தி சிறப்பாக இத்திட்டத்தை பூர்த்தியாக்கினர்.

தகவல் - கலிஸ்ரா ரவீந்திரன்,
அன்பிய ஊக்குவிப்பாளர்.

## சிலாவத்துறை

அரிப்புப் பங்கான சிலாவத்துறையில் ஆனி 19ம் திகதி புனித சவேரியாரின் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிலாவத்துறை பங்குத் தந்தை அருட் தந்தை யூட் குரூஸ் அடிகளார், முருங்கன் பங்குத் தந்தை தேவசகாயம்பிள்ளை அடிகளார் ஆகியோர் வருகை தந்து திருவிழாத் திருப்பலியை சிறப்பித்தார்கள்.

தகவல்- பவளராணி குரூஸ்,
நவரெட்ணம் வீதி, சிலாவத்துறை.

## துவரங்கேணி

உயிலங்குளம் பங்கில் கானகத்தால் சூழப்பட்ட துவரங்கேணி புனித அந்தோனியார் ஆலய திருவிழா வருடா வருடம் ஆனி - 13ந் திகதி வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. 11ந் திகதி புனிதரின் கொடியை ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார் மறைக்கல்வி இயக்குனர் அருட் தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளார். ஆயத்த நாள் வழிபாடுகள் உட்பட திருநாள் திருப்பலியை அடிகளாரோடு வங்காலை பங்குத்தந்தை அருட் தந்தை அவிதப்பர் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலியை வெகு பக்தி விமரிசையாக நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

தனவல் - ஆலய செயலாளர்,
தீ. இசிதோர்.

## தலைமன்னார்

அன்பிய வாரம் அன்று பங்கு மக்களிடையே உள்ள ஒற்றுமையை அடையாள முறையில் காண்பிக்கும் பொருட்டு அன்பிய வாரத்தின் இறுதிநாளான ஞாயிறு அன்று அன்பியப் பகிர்வு இடம்பெற்றது. இதில் ஏறக்குறைய 1000 பேருக்கு காலை உணவு பரிமாறப்பட்டது, பங்கில் உள்ள 6 வலயங்களைச் சேர்ந்தவர்களும் ஆலய வளாகத்தில் வலயம் வலயமாக அமர்ந்திருந்து காலை உணவை தமது குடும்பங்கள் சகிதம் உண்ட காட்சி அன்பிய வாழ்வின் அர்த்தத்தை அனைவருக்கும் உணர்த்தியது.

தகவல் - கொன்சி குரூஸ்,
தலைமன்னார்.

## வாழ்க்கைப் பெற்றான்கண்டல்

அளவக்கைப் பங்கில் உள்ள வாழ்க்கைப் பெற்றான் கண்டல் கிராமத்தின் பாதுகாவலரான புனித நீக்கிலார் திருவிழாவானது மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. 04.06.2002 திருவிழா திருப்பலியை செபஸ்ரியான் குரூஸ் அடிகளாரும், டெஸ்மன் குலாஸ் அடிகளாரும், விக்டர் சோசை அடிகளாரும், அளவக்கைப் பங்குத்தந்தை அலெக்சாண்டர் சில்வா அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார்கள்.

தகவல்:- ப. பிரிய தர்ஷ்னி (றூபா),
வாழ்க்கைபெற்றான்கண்டல், முருங்கன்.

தொடர் கட்டுரை 3

# திருக்குடும்ப சபை

## தியானயோக சகோதரிகள்

### சபையின் அருங்கொடையும், மனப்போக்கும்

திருக்குடும்பசபை முழுவதற்குமே ஒரே அருங்கொடை, ஒரே மனப்போக்கு, ஒரே நோக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அருங்கொடை : இறைவனோடும், மனுக்குலத்தோடும் அன்பில் ஐக்கியமாக வாழ்ந்து அனைத்து மக்களையும் இறைகுலமாக்குவது. மனப்போக்கு : நசரேத்து யேசு, மரி, சூசையைப் பின்பற்றி இறைவனை மாத்திரம் எல்லாவற்றிலும் தேடி, ஆசித்து, விரும்பி அவர் திருவுளப்படி வாழ்வது. நோக்கம் : எமது வாழ்வில் விசுவாசத்தை ஆழப்படுத்தி, உறுதிப்படுத்தி அனைத்து மக்களிடையேயும் பரப்புவது. ஆதிக்கிறீஸ்தவர்கள் வாழ்வை எமது வாழ்வில் புதுப்பித்து சாட்சி பகர்ந்து வாழ்வது.

இதைத்தான் காட்சித்தியான சகோதரிகளும், கிறீஸ்துவோடு இறைவனில் மறைந்த செப, தப வாழ்வால் வாழ அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்மாதிரிகை நசரேத்தூரில் வாழ்ந்த யேசு, மரி, சூசையின் எளிமையான, மறைந்த வாழ்வாகும். தம் அன்றாட வாழ்வில் திருக்குடும்பத்தின் வாழ்வைப் பின்பற்றுகின்றனர். தாம் இருக்கும் இடங்களிலே தமது குழுவை, இல்லத்தை இன்னுமொரு நசரேத் இல்லமாக அமைக்க முயற்சிக்கின்றனர். நாளாந்தம் திருக்குடும்பத்தின் வாழ்வை சிந்தித்து, தியானித்து அவர்கள் அன்பு வாழ்வின் புண்ணியங்களை ஏற்றுக்கொள்கின்றனர். தாழ்மையுள்ள நசரேத் இல்லமே சகோதரிகள் பாடம் பயிலும் பாடசாலை.

### திருக்குடும்ப காட்சித்தியான சகோதரிகள் வாழ்வும், பணியும்:

கிறீஸ்துவின் வனாந்தர அனுபவமாகிய விசுவாசத்தின் வெறுமை மனநிலையைப் பின்பற்ற ஆவல் கொண்டுள்ள அவர் மறை உடலாகிய திருச்சபையை இவர்கள் வாழ்வு தெளிவுபடுத்துகிறது. இறைவனில் மாத்திரம் இவர்கள் பசியும், தாகமும் திருப்தியும் காண்கின்றனர். ஆவியின் அருளால் இதயத்தைத் தூய்மைப்படுத்தி எளிமையாக்குகிறார்கள். இவர்கள் பாவிகளோடு பாவிகளாக, இறைவன் கருணையால் மீட்கப்பட்டவர்களாக, இறைவன் பிள்ளைகளாக அனைத்து மக்களின் சகோதரிகளாக விளங்குகின்றனர்.

இவர்கள் வாழ்வானது அன்பினதும், பலியினதும் பாதையில் கிறீஸ்துவுக்கு ஓர் பூரணமான ஆம் என்ற பதிலைக் கேட்டு நிற்கின்றது. இறைவனை மறந்து வாழ்தல், பிளவுபட்ட இதயம், பராக்குகள் ஆகியவற்றுக்கு எதிராக போராட இவ்வழைப்பு இவர்களுக்குச் சவால் விடுக்கின்றது. திருச்சபையில் இருந்தவரும், இருப்பவரும், இனி இருக்கப்போகிறவருமான இறைவனின் பிரசன்னத்துக்கு தங்களை அர்ப்பணிக்கிறார்கள் என்பதை இவர்கள் உணர்ந்து விசுவசிக்கிறார்கள். மறைந்த அப்போஸ்தல பணியின் கனிகளை உணரமுடியாத தம் வாழ்வின் பெறுமதியை விளக்கி, விசுவசித்துத் தம்மைக் கையளிக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உலக மீட்புக்காக இறைத்தந்தை கொண்டுள்ள ஆர்வமான அன்பை வெளிப்படுத்த தம் வாழ்வையே பலியாக்கிய கிறீஸ்துவைப் பின்சென்று வருகிறார்கள். இறைவனுடைய இதய ஊற்றின் அருகமர்ந்து உலகத்திற்காக கிறீஸ்துவின் அன்பில் இணைகின்றனர். இவர்களின் செப, அப்போஸ்தல பணி இரு வார்த்தைகளில் அடங்கும். "நிலைத்திருத்தல்" (Remain) "ஒன்று சேர்த்தல்" (Gather)

அன்று இராப்போசன வேளை இயேசுவின் அன்புச்சீடன் அவர் அருகில் இருந்து அவரது மார்பில் சாய்ந்தவண்ணம் இராயப்பருடைய விண்ணப்பத்தைத் தெரிவித்தார். அதேபோன்று சகோதரிகள் யேசு பாதத்தில் அமர்ந்து உலக மக்களின் தேவைகள் வேண்டுதல்களுக்கு செவிமடுத்து அதை கிறீஸ்துவுக்குத் தெரியப்படுத்திப் பரிந்துரைக்க அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் சாட்சியம் இவர்கள் வாழ்வே.

இக் காட்சித்தியான இல்லங்கள் மானிட கிறீஸ்தவ சமுதாயத்தின் மத்தியிலே அமைந்திருக்கின்றன. மக்களின் இன்ப, துன்ப ஏக்கங்களில் பங்குகொண்டு, கிறீஸ்துவின் அன்பை உலகிற்கும், அகில உலகத்தைக் கிறீஸ்துவிடமும் அழைத்துச் செல்கிறார்கள். இறை அனுபவம் தேடி, அமைதி, ஏகாந்த சூழலை விரும்புவோருக்கு வரவேற்பளிக்கின்றனர். தம் செப வழிபாடுகளில் பங்குகொள்ளவும் சந்தர்ப்பம் அளிக்கின்றனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## சிறுகதை - விடைகாணா வினாக்கள்



நான் ஒரு நாள் பஸ்ஸில் பயணம்செய்து கொண்டிருந்தேன். ஆசனம் எனக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் நின்று கொண்டே பயணம் செய்தேன். நான் நின்று கொண்டிருந்த இடத்தின் பக்கத்தில் ஒரு ஆசனத்தில் ஒரு தாயும், ஒரு சிறுவனும், சிறுமியும் உட்கார்ந்திருந்தனர். அங்கே எனது கண்கள் வலம் வந்தன. எனக்கு ஓர் அதிசயம். ஆறு வயது நிரம்பிய என் மகன் போன்ற ஒரு சிறுவன் அங்கு இருந்து குறும்புச் செயல்கள் செய்து கொண்டிருந்தான். தன் தங்கையைச் சுரண்டி பலவாறு குறும்புகள் புரிந்துகொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்துக்கொண்டிருந்ததை அவன் அவதானித்தான். நான் அவனைப் பாசமிகு மகனாகப் பார்த்தேன். அவன் என்னை இரக்கம் மிகு தந்தையாகப் பார்த்தான். என்னால் நம்ப முடியவில்லை. என் மகனா இந்த பஸ்சில்? எங்கு போய்க்கொண்டிருக்கின்றான்? மாறி மாறி கண்கள் சந்தித்தன. குழந்தை சிரிப்பிலும் மகிழ்ச்சியிலும் குதுாகலித்தான். நான் சேர வேண்டிய இடம் நெருங்கி விட்டது. அப்போதுதான் அந்த சிறுவன் யார் என்று உணர்ந்து கொண்டேன். அவன் ஒரு வாய்பேசாத ஊமை!.

அவன் வாசமில்லாத ஒரு மலர்! என் மனம் பரதவித்தது. நான் என்ன செய்வதென்று தெரியாது திகைத்தேன். பால் வடியும் அவன் பூ முகத்தில் நான் ஆயிரம் கனவு கண்டேன். "அம்மா என்று அழைக்காத உயிரில்லையே" என்று பாடிய கவிஞன் இவன் போன்ற மழலைகளை ஏன் மறந்து விட்டான்? இறைவா என்ன இது? பால்மணம் மாறாத என் மகன் போன்ற அந்த மகன் செய்த குற்றமென்ன? இவை விடைகாணா வினாக்களாக மீண்டும் மீண்டும் என் உள்ளத்தில் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

மறைப்பணியாளன், முருங்கன்

# இறை அழைத்தலை ஏற்றுக்கொள்ள நீ தயாரா?



## இதோ மறைமாவட்டத்தின் இதயமெனத் திகழும் மடுமாதா சிறிய குருமடத்தில் அரியதோர் வாய்ப்பு!

யூலை மாதம் 27, 28ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும்
வந்து பாருங்கள் எனும் அழைத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சி!

இதில் கலந்துகொண்டு இறை அழைத்தலின் மகிமையை உணர்ந்து பாருங்கள். உங்கள் பெயர்களை உங்களது பங்குத் தந்தையிடம் முன்னறிவியுங்கள். இந்நிகழ்வில் கலந்து கொண்டு இறை அழைத்தலுக்காக குரல் கொடுக்க உங்கள் இதயம் நாடினால் பங்குத் தந்தையிடம் இதைப்பற்றி பேசுங்கள். பங்குத் தந்தையின் உருவாக்கத்தின் கீழ் ஆறுமாதம் இறை அழைத்தலுக்கான அறிகுறி உங்களிடம் உண்டா என கண்காணிக்கப்படுவீர்கள். பின் கார்த்திகை இறுதியில் குருமட அதிபரினாலும் இறுதியாக ஆயரினாலும் நேர்முகம் நடாத்தப்பட்டு இவ்விருவரின் சிபார்சுக்கிணங்க நீங்கள் ஒரு குருமட மாணவனாக அழைக்கப்படுவீர்கள்.

- ☐ இறை அழைத்தலை உன் உள்ளமதில் விதைத்திட...
- ☐ குருமடத்தின் உருவாக்கத்தைப் பற்றிய அறிவை பெற ....
- ☐ இறை அழைத்தல் என்றால் என்ன? என்பதை அறிய ......

## இதோ அரியதோர் சந்தர்ப்பம்!

யூலை 27, மாலை தொடக்கம் 28 மதிய உணவு வரை நடைபெற இருக்கிறது.
உங்கள் இதயமதில் இறை அழைத்தல் எனும் செடியை வளர்க்க
வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.
தகவல்:- குருமட அதிபரும், குருமட மாணவர்களும்,
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

# தவறான பத்திரிகைச் செய்திக்கு
# மன்னார் ஆயர் மறுப்பு
## சண்டே லீடர் பத்திரிகைக்கு பதில் கடிதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன முரண்பாடுகளினால் ஏற்பட்ட யுத்தம் காரணமாக கடந்த 20 ஆண்டுகளாக நிலவி வந்த பிளவுகளின் பின்னர், தற்போதைய யுத்த நிறுத்த உடன்படிக்கையின் விளைவாக ஏற்பட்ட இயல்பு நிலையைத் தொடர்ந்து இவ்வருட ஆடிமாதத் திருவிழாவிற்கு, யாத்திரிகர்கள் மடு அன்னையின் திருப்பதிக்கு வருகை தரக்கூடியதாயிருந்தது. மடுத்திருப்பதிக்கு வருகை தருபவர்களின் நோக்கங்கள் வெற்றிகரமாக நிறைவேறுவதை இலகுபடுத்துவதற்காக, வழிகாட்டும் சட்டத் தொகுப்பு ஒன்று வரையப்பட்டு ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அது செயற்பட்டு வருகின்றது. இந்தச் சட்டத் தொகுப்பில் அடங்கியுள்ள விமர்சனத்துக்குரிய ஒரு பிரிவு யாதெனில் மதுபானங்களின் பாவனை மடுப்பதியில் கடுமையாகத் தடைசெய்யப்பட்டிருத்தலாகும். இதன்படி உணவு வகைகள் மற்றும் சமய சம்பந்தமான பரிசுத்த பண்டங்கள் மட்டுமே மடுத்திருப்பதி வளாகத்துக்குள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் இவ்வருட ஆடி, ஆவணி மாதத் திருவிழாக்களுக்கு முன்னர் "எல்லா வகையான மதுபான வகைகளும் மடுவில் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன" என்று எமது செய்தித்தாள்கள் ஊடாக யாத்திரிகர்களுக்கு அறிவுறுத்தினோம்.

அதே வேளை மடுறோட் வழியாக பயணம் செய்யும்போது தமது சொந்தத் தேவைக்கான பொருட்களையும், தங்களது நாளாந்த பாவனைக்கான பொருட்களையும் மட்டுமே கொண்டுவரும்படியும் அறிவுறுத்தினோம். இதன்படி யாத்திரிகர்களால் கொண்டு வரப்பட்ட மதுபான வகைகள் அனைத்தையும் சாரணரின் உதவியுடன் திருச்சபை அதிகாரிகள் புனித பகுதிக்கு அப்பால் ஓரிடத்தில் சேகரித்து வைத்தனர். பின்னர் அவற்றிற்குரியவர்கள் மடுத்திருப்பதியை விட்டுத் திரும்பிச் செல்லும் வேளை அவரவருக்குரியவை அவரவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. இதில் விடுதலைப் புலிகள் செய்வதற்கு எதுவும் இருக்கவில்லை. அன்றியும் மடுறோட் வழியாகத் தமது சொந்தப் பாவனைப் பொருட்களுடன் வந்தவர்களிடமிருந்து அவர்கள் எவ்வித வரியும் அறவிடவுமில்லை, எந்தவிதமான பணமும் சேகரிக்கவுமில்லை.

எமது வேண்டுகோளின்படி மடுவிற்கு அயற்கிராமமான பண்டிவிரிச்சானில் இயங்கிவந்த மதுபான விற்பனை நிலையத்தைக்கூட மூடுவதற்கு புலிகள் எமக்கு உத்தரவாதமளித்தனர்.

எமது வேண்டுகோளுக்கேற்ப உள்ளூர் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ஏறக்குறைய ஒரு லட்சம் யாத்திரிகர்கள் மத்தியில் மிகவும் திறமையாகச் செயலாற்றி சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட எமக்கு உதவி புரிந்தனர். மூத்த இளைய பாடசாலைச் சாரணர்களையும் நாம் சேவையில் ஈடுபடுத்தினோம். அவர்களில் சிலர் பக்தர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைக்கும் மடு அன்னையின் திருப்பீடப் பகுதியில் பணிபுரிந்தனர். இந்தப் பணிகளில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் எவரும் எமக்கு உதவிபுரியவுமில்லை, மடு வளாகத்துக்குள் வேறு எந்தவித பணிகளிலும் அவர்கள் ஈடுபடவுமில்லை. அத்துடன் வாகனங்கள் உள்ளே வருவதிலும், வெளியே செல்வதிலும் எந்தவித தாமதமும் ஏற்படவில்லை. இந்த ஆடி மாதத் திருவிழாவில் அரசாங்க அதிபரும், திருச்சபை அதிகாரிகளும் கையாண்ட போற்றத்தக்க பல முயற்சிகளின் மத்தியிலும், மீன், இறைச்சி போன்றவைகளுக்கு சற்றுத் தட்டுப்பாடு நிலவியது என்பது உண்மை. இதில் அக்கறையுள்ள அனைவரதும் ஒத்துழைப்புடன் இத்தகைய நிலைமைகள் மீண்டும் இடம் பெறமாட்டா என்றும், வருங்காலத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் நியாயமானதாக இருக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

புனித பகுதிக்குள் குடி வகைகள் பாவித்தல் யாத்திரிகர்களுக்குக் காத்திரமான அசௌகரியங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பது ஒருபுறமிருக்க, திருப்பதி வழிபாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இத்தகைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் இவ்வாறான பொருட்களை மடுறோட்டிலேயே நிறுத்திவைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

அத்துடன் வருடந்தோறும் அதிகளவில் மடுத்திருப்பதிக்கு வருகைதரும் யாத்திரிகர்களின் நன்மை கருதி மடுறோட் பாதையை நிரந்தரமாகத் திறந்து வைக்கும்படியும் நாம் அரசாங்கத்தைக் கேட்டு நிற்கிறோம். ஆண்டுதோறும் 24 மணி நேரமும் மட்டுமல்ல, சனி ஞாயிறு தினங்களில்கூட யாத்திரிகர்கள் மடுவிற்கு வந்து செல்வதற்கு வசதியாக, மடுறோட் பாதையைத் திறந்து வைப்பதில் தமக்கு எந்தவித தடையுமில்லை என்று விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர்.

**கொழும்பு மறைமாவட்டத்திற்கு ....** 1ம் பக்கத் தொடர்ச்சி

பேராயர் கோமிஸ் பேராயராக உயர்த்தப்படுவதற்கு முன்னர் அநுராதபுர மறைமாவட்ட ஆயராக பணியாற்றிக்கொண்டிருந்தார். இவர் இலங்கை ஆயர் மன்றத்தின் தலைவராகவும் ஆசிய ஆயர் பேரவையின் தலைமைப் பொறுப்பாகிய அதன் செயலாளர் நாயகமாகவும் விளங்குகிறார். ஏனெனில் இந்த அமைப்புக்கு தலைவர் இல்லை. இவர் அநுராதபுர ஆயராக நியமனம் பெறுவதற்கு முன்னர் 38 ஆண்டுகளாக கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றினார். இதில் 28 ஆண்டுகள் கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக இருந்தார். எனவே நிறைவான அனுபவத்தோடே இவர் கொழும்பு பேராயர் பணியை ஏற்கிறார். இவர் சிறந்த கல்விமானும் வரலாற்றாய்வாளரும் பல நூல்களின் ஆசிரியருமாவார். அனைத்திற்கும் மேலாக பல்லாண்டு அனுபவம் பெற்ற இறை பணியாளராவார். புதிய பேராயரை மன்னார் இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது.

**அன்னை திரேசாவின் ....** 1ம் பக்கத் தொடர்ச்சி

இன்று மசெடோனியா என்று அழைக்கப்படும் முன்னாள் அல்பேனிய கொன்ழா பொஜாக்ஸ்கியூ எனும் ஊரில் அல்பேனிய பெற்றோரின் மகளாக 1910 ஆகஸ்ட் 26ல் அன்னை திரேசா பிறந்தார். தமது வாழ்வில் பெரும் பகுதியை ஏழைகளுக்காகவே தொண்டு செய்து கல்கத்தா நகரில் கழித்தார். 1979ல் தமது அயராத பணிகளுக்காக உலகின் உயர்ந்த கௌரவமாகக் கருதப்படும் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். அன்னை திரேசா 1993ல் திருத்தந்தை அல்பேனியா வந்திருந்த வேளை ஒருநாள் தரிசிப்பை மேற்கொண்டு அல்பேனியா சென்றிருந்தார். மூன்றரைக் கோடி அல்பேனிய மக்களில் பத்து விழுக்காட்டினர் கத்தோலிக்கர். எழுபது விழுக்காட்டினர் இஸ்லாமியர். இருபது விழுக்காட்டினர் வைதீக கிறிஸ்தவர்கள். 1967ல் அல்பேனிய முன்னாள் அரசு தம் நாட்டை ஒரு பொதுவுடமை நாடெனப் பகிரங்கப்படுத்தியது. 1990ல் மத வழிபாட்டுச் சுதந்திரம் மீண்டும் வழங்கப்பட்டது. முதலாவது கத்தோலிக்க அருட்பணியாளர் யூன் 2000ல் திருநிலைப்படுத்தப்பட்டார். மத வழிபாட்டுக்கு பல தடைகள் இருந்தபோதும் 1988ல் அன்னை திரேசா ஸ்கோடர் நகரில் இருந்த தமது குடும்பக் கல்லறைகளைத் தரிசிக்க அரசு அனுமதி வழங்கியிருந்ததுடன் அவ்வருடத்திலேயே அன்னையின் உருவத்தை அல்பேனிய தபால் முத்திரைகளில் வெளியிட்டு வைத்தது குறிப்பிடத்தக்கது.

**மடுத்திருவிழாவிற்காக ....** 1ம் பக்கத் தொடர்ச்சி

மேற்படி பாதையானது யூலை மாதம் 2ம் திகதி நடைபெற்ற மடுத் திருவிழாவையொட்டி யூன் 22ஆம் திகதி முதல் யூலை 4ம் திகதிவரை திறக்கப்பட்டிருந்தது.

ஆவணி 15ம் திகதி திருவிழாவை முன்னிட்டு மேற்படி வீதி ஆவணி 5ம் திகதி முதல் 19ம் திகதி வரை திறக்கப்பட்டிருக்கும். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் ஆண்டகை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் விடுத்த வேண்டுகோளிற்கு இசைவாகவே அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன இந்த வீதியைத் திறப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்திருந்தார். இது பற்றி மன்னார் ஆயர் கருத்துத் தெரிவிக்கையில் இப்பாதையை 24 மணிநேரமும் திறந்து வைக்க புலிகள் சம்மதம் தெரிவித்திருப்பதாக அறிவித்தார். திறக்கப்படும் இவ்வீதி முன்னர் சுற்றி வந்த 30 கிலோ மீற்றர் தூரத்தை 7 கிலோமீற்றர் தூரமாக குறைத்துள்ளது. ஏ- 9 வீதி, மடு வீதி, என்பன திறக்கப்பட்டமையால் அதிக பக்தர்கள் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இறுதி யாத்திரையாகி விட்ட ......** 10ம் பக்கத் தொடர்ச்சி

இறுதியில் அருட்தந்தை கந்தவெட்டிய பொலிஸ் நிலையம் சென்றார். உடனடியாக பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அவ்வேளையில் ஊர் மக்களும் பெருமளவில் கூடிவிட்டனர். சம்பவம் நடந்த இடத்தில் தேடுவதில் பயனேதும் இல்லை என ஊர் மக்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு கூறினர். அவர்கள் கூறியபடி 4 கிலோ மீற்றர் துாரத்தில் உள்ள லோக்கல் ஓயா என்ற ஆற்றில் தேடும் பணி ஆரம்பமானது. இதற்காக பல படகுகள் கொண்டுவரப்பட்டன. சுமார் 36 மணித்தியாலங்களின்பின் காணாமல் போயிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களால் மீட்டெடுக்கப்பட்டனர். ஆனால் அப்போது அவர்கள் உடல்களில் உயிர் பிரிந்துவிட்டது. தென்பகுதி மக்களின் மனித உணர்வுகளை அறிந்துகொள்ள யூட்டும் சாம்சனும் இப்போது உயிருடன் இல்லை.

அகால மரணமடைந்த இளைஞர்களின் குடும்பத்தவர்களுக்கும் அருட்தந்தை பயஸ் அடிகளாருக்கும் உடன் சென்ற இளஞர் யுவதிகளுக்கும் மன்னா வாசகர்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

ஒவ்வொரு மன்னாவிலும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் அறிவு சார்ந்த ஆக்கபூர்வமான பயனுள்ள கேள்வி ஒன்று பாராட்டுக்குரிய கேள்வியாகத் தெரிவுசெய்யப்படும். எங்கே உங்கள் கேள்விக் கணைகளை அனுப்புங்கள்! (பதிப்பாசிரியர்)


கே. பெரியப்பா, வேளாங்கண்ணி அடியார், அந்தோனியார் அடியார் என்று கூறி கடிதம் அனுப்புபவர்கள் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

*வே. அமலநாயகி, ஆவணம், நானாட்டான்*

ப. இந்தக் கடிதங்கள் எல்லாம் யேசுவின் சீடத்துவத்தை பிரதிபலிக்கும் எந்த முயற்சியும் அல்ல. இப்படிக் கடிதங்கள் வந்தால் பேசாமல் அவற்றை கிழித்து குப்பையில் போட்டுவிடுங்கள். இக்கடிதத்தை அவமதித்தவர்களுக்கு அப்படி நடந்தது இப்படி நடந்தது என்றெல்லாம் கடிதத்தில் மிரட்டியிருப்பார்கள். பயப்படாதீர்கள். அன்னை மரியாளும் அந்தோனியாரும் அவர்கள் நினைப்பதுபோல் இப்படிப்பட்ட கடிதங்கள் மூலம் புகழை விரும்புபவர்கள் அல்ல. அல்லது இதற்காக நம்மை தண்டிப்பவர்களும் அல்ல. அவர்களுடைய வாழ்வின் நற்பண்புகளை கடைப்பிடித்து ஒழுகுங்கள். அதுவே அவர்களுக்கு விருப்பமான செயல்.

கே. பகைமை உணர்வை மனத்தில் வைத்துக்கொண்டு பலிப்பீடத்தில் காணிக்கை செலுத்துகிறார்களே! இவர்கள் மனம் மாறாதது ஏன்?

*ஏ. ராசேந்திரன், , கீளியன்குடியிருப்பு*



ப. இவர்கள் மனம் மாறாதது ஏன்? இவர்கள் மனம் மாறாதது ஏன்? என்று மற்றவர்களைக் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள். முதலில் மன மாற்றத்திற்கான முதல் அடியை நீங்கள் எடுத்து வையுங்கள். நான் மற்றவாகளை மாற்ற முடியாமல் போகலாம். ஆனால் என்னை நான் மாற்றலாம் அல்லவா?

கே. விரும்பியது கிடைக்கும்போது?

*றொபட் சாந்த லூசியா, பியர், தலைமன்னார்.*

ப. அடுத்த விருப்பம் நிறைவேற வேண்டும் என்ற அவா அந்த நிமிடத்திலேயே உள்ளத்தில் உண்டாகிவிடும்.

கே. உலகிலேயே நீங்கள் கொடுமையானதாக எதை நினைக்கிறீர்கள்?

*கி. சுகந்தி, செபஸ்ரியார் கோவில் பின்புறம், மன்னார்.*

ப. நம்பிக்கைத் துரோகத்தை!

கே. யேசு தொங்கும் சிலுவையில் INRI என பொறிக்கப்பட்டுள்ளதே இப்பதத்தினை சற்று விளக்குவீர்களா?

*ஞா. செபஞானதாஸ், நறுவிலிக்குளம், வங்காலை.*

ப. INRI என்ற சுருக்க எழுத்துக்களின் முழுமையான வடிவம் IHESU NAZERENUM REX IHUDEORUM என்பதாகும். இது இலத்தின் மொழியிலான வார்த்தை. இதன் கருத்து "நசரேத்தூர் யேசு யூதர்களின் அரசன்" என்பதாகும்.

▣ கே. மனம் ஒரு கோயில் என்று திருப்பலிக்கு வராமல் இருப்பவர்களுக்கு பெரியப்பா கூற விரும்புவது என்ன?

*பி. ஜெயகாந்தன், சிதம்பரபுரம், வவுனியா.*

ப. மனம் ஒரு கோயில் என்று சொல்வது உண்மை. அதேவேளை மனம் ஒரு குரங்கு என்றும் சொல்கிறார்களே! பாய்ந்து திரியும் அந்தக் குரங்கை கட்டுப்படுத்தி வழிப்படுத்த இறைபிரசன்னத்தை உணர ஆலயம் செல்லத்தானே வேண்டும். நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி என்று சும்மாவா சொல்லியுள்ளார்கள். கடவுள் மனிதனை சமூகமாகப் படைத்திருக்கிறார். எனவே அவரை வழிபட வரும்போது சமூகமாக வரவேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கின்றார்.

கே. "பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள்" என்று திருவிவிலியம் கூறுகின்றது. ஆனால் பெற்றோர்கள் இதை பின்பற்றாததன் காரணம் என்ன?

யே. பிரான்சிஸ்கா, தரம் 10 A ஒலிமடு, நானாட்டான

ப. பிள்ளைகள் பெற்றோருக்கு எரிச்சல் மூட்டிக்கொண்டிருப்பதால்தான்!

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீத்தார் நினைவுகள்

2ம் ஆண்டு நினைவு



திருமதி ம. இன்னாசிப்பிள்ளை
கங்காணதீவு,
நானாட்டான்.
மண்ணில் விண்ணில்
09. 04. 1925 22. 08. 2000

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
இருந்த எங்கள்
அன்பு அம்மாவே,
வருடம் இரண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள்
நாள் தோறும் எங்களை
வாட்டுதம்மா!
உங்கள் ஆத்மா இறைவனில்
சாந்தி அடைய
என்றும் ஆண்டவனை
பிராத்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 22.8.2002 வியாழன் காலை 7 மணிக்கு அமெரிக்கா புனித கிறிஸ்து அரசர் ஆலயத்திலும், சிலாபம் புனித பேர்னடேற் ஆலயத்திலும், நானாட்டான் புனித ஆரோக்கியமாத ஆலயத்திலும், மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்திலும், இரத்தினபுரி தெகியோவிற்ற புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், மற்றும் உற்றார்
உறவினர்கள், நண்பர்கள்.

2ம் ஆண்டு நினைவு



திரு. செ. அமிர்தநாதர்
சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.
மண்ணில் விண்ணில்
24. 01. 1925 20. 07. 2000

எமது குடும்பத்தின் ஒளி
விளக்காய்
பாசமிகு கணவனாய்.
தந்தையாய்,
மாமனாய், பேரனாய், எம்மை
எல்லாம் அன்போடு
அரவணைத்தீரே!
ஆண்டிரண்டு சென்றாலும்,
உங்கள் ஆதரவு இல்லாமல்
நாம் கண்ணீர் வடிக்கின்றோம்.

ஆண்டுகள் பல சென்றாலும்,
உங்கள் நினைவலைகள் எம்
நெஞ்சை விட்டு அகலாது.
நித்திய பேரின்பத்தில்
நிதமும் களித்திருக்க
சத்திய நாதனை நாம்
நித்தமும் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால்
துயருறும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்,
நண்பர்கள்.

1ம் ஆண்டு நினைவு



திரு. ச. சத்தியசீலன் லெம்பேட்
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர்)
வங்காலை.
மண்ணில் விண்ணில்
25. 04. 1940 01. 08. 2001

எம்மைத் திண்டாட வைத்துச்
சென்றது ஓராண்டு!
அன்றாடம் உங்களை
நினைந்திடச் செய்து
அப்பாவாக நீங்கள் எமக்காய்
ஆற்றிட்ட அரும்பணி
செப்பவே இங்கு எமக்கு
வாய்கள் போதாது.
தப்பேது நாம் செய்தோம்
சாற்றுங்கள் தந்தையே!
தரணியில் எம்மைத் தவிக்கவிட்டு
நீங்கள் சென்றதற்கு?
உங்கள் தகுதியும், திறனும் இழந்து
இன்று தவிக்கிறது தரணி.
இன்னும் ஒரு சீலன் எங்கு
கிடைப்பான் என்று
விண்ணுலகம் மகிழ்கிறது!
விருந்துண்ண வந்தான் பாலன்
அவன் வீரம் நிறைந்த சத்திய
சீலன் என்று எண்ணியே
மகிழ்கின்றோம் விண்ணில் நீங்கள்
வீற்றிருக்கும் காட்சி
மண்ணிலே எமக்காய் அன்றாடம்
மன்றாடுங்கள்! ஆதிபரன்
தந்தையிடம்!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.
வங்காலை.

## நீத்தார் நினைவுகள் பற்றிய அறிவித்தல்

நீத்தார் நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு, (அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 500 ஆகியவற்றை அனுப்பி வையுங்கள்.

தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம்.

பதிப்பாசிரியர்.

**உங்களது மிகச்சிறந்த அன்பளிப்பு**
**மன்னா!**
**யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!**
உங்கள உறவினர் நண்பர்களுககு
**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!**
உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த ஞாபகப்பரிசு
**மன்னா!**
நீங்கள் ஆவலோடு படித்து சுவைக்கும் மன்னாவைதூர இடத்தில் இருக்கும் உங்கள் உறவினர் நண்பர்களும் படித்து சுவைக்கும்படி செய்யலாமே!
அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் உறவினர் நண்பரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும்.
உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 200யும்
வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 750யும் வெளிநாட்டில் உள்ளவர்கள் (10 யூரோவும்) அனுப்பவும். சந்தாப்பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பலாம்.

**மன்னா சந்தாதாரர்களே!**
**உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.**
மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 750 (10 யூரோ)



தொடர்புகளுக்கு

| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
|---|---|
| பதிப்பாசிரியர், மன்னா திருமறைப்பணி நிலையம், செபஸ்ரியார் வீதி மன்னார். | பதிப்பாசிரியர் மன்னா பங்குப்பணிமனை, புனித லோறன்சியார் ஆலயம், தலைமன்னார். |
| **OFF. ADDRESS** | **RES. ADDRESS** |
| The Editor, MANNA Pastoral Centre, St. Sebestian's Street Mannar, Sri Lanka. | The Editor MANNA Parish House St. Lawrence Church Talaimannar, Sri Lanka. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை - உரைப்பது - ஸ்நாபகன்

## தீர்வு கண்துடைப்பாகிவிடக் கூடாது!

துர்ப்பாக்கியமான போர் நிறுத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிகள் அமைதி கண்டுள்ளன. போரின் கொடூரமும் அதன் விளைவுகளும் உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தன. அழுகுரலும் இறப்பும் இரண்டு சகாப்தப் போரை நிரப்பின.

மதிப்பீட்டின்படி 65.000க்கு மேற்பட்ட பொதுமக்கள் போரில் மடிந்துள்ளனர். 14.000க்கும் அதிகமாக விடுதலைப்புலிகள் பலியாகியுள்ளனர். ஏறத்தாள 240 கரும்புலிகள் தற்கொலைக் குண்டுகளாக வெடித்துள்ளனர். இராணுவம் வெளியிடப்படாத பெரும் தொகையினரை இழந்துள்ளது. உள்ளூரிலேயே 630,000 அகதிகளைக் கொண்ட உலகின் பாரிய அகதிகள் நாடாக, ஆப்கானிஸ்தானுக்கு அடுத்து இலங்கை நின்றது. ஏறத்தாள 17.000 பேர் காணாமற் போயினர். உலகில் ஈராக்கிற்கு அடுத்த நிலையில் பெரும் தொகையினர் காணாமற்போன பட்டியலில் இரண்டாம் இடத்தை இலங்கை தட்டிக்கொண்டது.

இன்று தமிழ் மண்ணில் யுத்த முழக்கங்கள் கேட்பதில்லை. இந்த அமைதி இடைவேளை மக்களுக்கு ஓரளவு ஆறுதல் தரலாம். உணவுத்தடை, மருந்துத்தடை ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. பல தெருக்களைத் திறந்து, அனுமதி முறைகள் தளர்த்தப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்த அமைதி நிரந்தரமாக நீடிக்கவே உள்நாட்டிடு மக்களும் புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் இலங்கை மக்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். எனினும் இம்மக்களின் விருப்பத்துக்கு மாறாக பேரினவாதமும், அமைதிக்கு எதிரானவர்களும் கைகோர்த்து செயற்பட்டு அமைதியை இல்லாமற் செய்வதற்கு முஸ்தீபு நடைபெறகிறதுபோல் தெரிகிறது. ஆரம்பத்தில் உறுதியாக இருந்த இலங்கை அரசும் இப்பொழுது ஆட்டங்காணுவதுபோலத் தென்படுகின்றது. தமிழர் தாயகம், வடகிழக்கு இடைக்கால அரசு போன்ற உறுதிமொழிகளைக் கொடுக்கவில்லை என்று பின்னடிக்கின்ற அரசின் நிலைப்பாடும், ஜனாதிபதியின் முன்னுக்குப் பின்னான பேச்சும் இராணுவத்தின் இறுமாப்பு நிலையும் மீண்டும் தமிழர் பகுதிகளில் அமைதி குலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தைப் படிப்படியாக ஏற்படுத்துகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டவை நிறைவேற்றப்படாமையும், இலங்கையில் அந்நிய சக்திகளுக்கு இடங்கொடுக்கும் நிலைப்பாடும் இவ் அமைதி ஒப்பந்தம் குலைக்கப்பட்டு மீண்டும் தமிழர் தலையில் போர் திணிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் படிப்படியாக எழுகின்றது.

இலங்கைக்கு ஒளிமயமான அமைதியான எதிர்காலம் ஏற்பட வேண்டுமென்றால் இலங்கை அரசு துணிந்து நின்று அமைதிக்கு எதிராகச் செயற்படுகின்ற அத்தனை சக்திகளையும் ஓரம்கட்டி, தனிமைப்படுத்தி முழு மூச்சாக அமைதிக்காகச் செயற்பட வேண்டும். இத்தனை அழிவுகளுக்கும் பின்னர் வர இருக்கின்ற தீர்வு தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட ஓர் தீர்வாக இருக்க வேண்டும். சமத்துவமான உரிமைகளுடன் கௌரவமாக வாழும் நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்கான அடித்தளங்கள் பேச்சுவார்த்தையின்போது போடப்பட வேண்டும். தீர்வு வெறும் கண்துடைப்பாக மாறிவிடக்கூடாது.

"வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும். விடாமுயற்சியுடையோரின் கையோ செல்வத்தை உண்டாக்கும்"



சோம்பலும் உற்சாகமின்றி இருப்பதும் அலகையின் செயல்பாடாகும். அது வாழ்க்கையில் துன்பத்தைத் தரும். ஆனால் உழைப்பாளி வாழ்வில் வளம் பெறுகிறான்.

## வரலாற்று மேற்கோள்

"தன்னுடைய நலன்களை காக்க மதில் மேல் பூனைபோல அமர்ந்திருக்கும் திருச்சபையைவிட நீதிக்காகவும் மனித மதிப்பீடுகளுக்காகவும் அச்சமின்றி நிமிர்ந்து நிற்கும் திருச்சபையே இந்தியாவிற்கு தேவை."

- கர்தினால் லோறன்ஸ் பிக்காச்சி சே. ச.

## சிந்தனைக்கு

"பத்திரிகைக் கார்டுண் ஒன்றில் மூன்று மண்டை ஓடுகள். அவற்றின் மேல் இப்படி வாசகம். மதக்கலவரங்களில் மாண்ட இந்த மூவரில் யார் இந்து? யார் முஸ்லிம்? யார் சீக்கியர்?

அருட்பணியாளர் ஜெரி சே.ச.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 3

### லூக்கா நற்செய்தி

வாசகர்களே! மாணவர்களே! உங்கள் விவிலிய அறிவை பரீட்சிக்கவும் விவிலியத்தை வாசிக்கத தூண்டவும் இக்குறுக்கெழுத்துப் போட்டியை தொடர்ச்சியாக நடாத்த திட்டமிட்டுள்ளோம்.

கீழே உள்ள பெட்டிகளைக் கொண்ட படிவத்தை நீங்களே தயாரித்து வெற்றிடங்களை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். (வெட்டி அனுப்புவதானால் உங்கள் மன்னா பத்திரிகையை பாதுகாத்து வைக்க முடியாமல் இழக்க நேரிடும்) உங்கள் விடைகளை 31. 08. 2002க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத் தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.

### அறிவித்தல்


1)---------------------- இந்த அடையாளமிட்ட இடம் நிரப்பவேண்டிய சொல் வரவேண்டிய இடமாகும்.

.......................... இந்த அடையாளம் வாக்கியம் தொடர்கிறது என்பதைக் காட்டும் அடையாளமாகும்.

2) விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 1ல் கீழிருந்து மேல வரவேண்டிய கேள்விகள் தவறுதலாக இடம்பெறவில்லை. இதைச் சிலர் சுட்டிக்காட்டியிருந்தார்கள். நன்றி. இதனால் ஏற்பட்ட குழப்பத்திற்காக வருந்துகிறோம்.

3) சிலர் பெயர் விலாசத்தை எழுத மறந்து விடுகிறீர்கள். இதைக் கவனத்தில் கொள்ளவும்.

1ம் பரிசு - ரூபா 250
2ம் பரிசு - ரூபா 150
3ம் பரிசு - ரூபா 100




#### இடமிருந்து வலம்

1.அவளுடைய பெற்றோர் -------------- ப்போயினர்

5. -------------- எப்போது வருமென்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர்.

9. இயேசு வெளியே சென்று சுங்கச் -------------- அமர்ந்திருந்த ............ ஒருவரைக் கண்டார்.

10. இயேசு செய்த யாவற்றையும் பார்த்து அனைவரும்----

11. யாரைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய ------- -------- ஒரு மனிதரையா?

17. நேர்மையாளர் போன்று நடித்து அவரது பேச்சில் குற்றம் காண -------------- அனுப்பி வைத்தனர்.

20. இதோ கோதுமையைப் போல் உங்களைப் -------------- சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான்.

#### கீழிருந்து மேல்

3. அவர்கள் -------------- மாட்சியோடு இலங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள்.

4. உள்ளே இருப்பவர் எனக்குத் -------------- கொடுக்காதே .....................

12. இயேசு அவர்களுடன் இறங்கிவந்து சமவெளியான -------------- நின்றார்.

13. தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் அவரை -------------- விட வழி தேடினார்கள்.

15 --------------மிகு கற்களாலும் நேர்ச்சைப் பொருள்களாலும் கோவில் அழகு படுத்தப்பட்டிருக்கிறது.

#### மேலிருந்து கீழ்

1. தம்மைக் கூட்டிச் செல்லும்படி இயேசுவிடம்--------------

2. ஆனால் மார்த்தா பற்பல பணிகள்------------ பரபரப்பாகி................

4. அவரது -------------- பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார்.

8. விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் -------------- க் கொடுப்பது எத்துணை உறுதி.

10.தங்களுள் பெரியவன் யார் என்ற -------------- அவர்களிடையே எழுந்தது

13. பெரிய நில நடுக்கங்களும் பல -------------- பஞ்சமும், கொள்ளை நோயும் ஏற்படும். (இறுதி இரு எழுத்துக்கள் விடப்பட்டுள்ளன)

14. அப்போது --------------ஒன்றின் மேல் ஒன்று இராதபடி இவையெல்லாம் இடிக்கப்படும். (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)

16. அவரது உடலை-------------- மெல்லிய துணியால் சுற்றி .................. கல்லறையில் வைத்தார்.

#### வலமிருந்து இடம்

2. உங்களை ................ நகரை விட்டுப்------------ உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள்.

3. விளக்குச் -------------- நீங்கள் ஒளிமயமாய் இருப்பது போல் அனைத்தும் ஒளிமயமாய் இருக்கும்.

6. நான் சொல்வதைக்கேட்டு------------ வைத்துக் கொள்ளுங்கள்.

7 --------------.ர்கள் ஆண்டவரிடம் "எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" என்றுகேட்டார்கள்.

13. ஏனெனில் மக்கள் யோவானை -------------- என்று உறுதியாய் நம்பியிருந்தனர்.

15. நானே உங்களுக்கு --------------ஞானத்தையும் கொடுப்பேன். (குழம்பியுள்ளது)

18. அவரது -------------- குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்டார்கள் (குழம்பியுள்ளது)

19. அப்போது என்ன பதிலளிப்பது என்று -------------- நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 1 (மத்தேயு நற்செய்தி)

### சரியான விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|---|
| 1. நோய் | 1. நோன்பு | 3. ஊரிலும் |
| 2. பணிவிடை | 2. பகைவரிடம் | 5. நீங்கள் |
| 4. திருமுழுக்கு | 4. திருமண | 10. உள்ளத்தின் |
| 5. நீதி | 7. குருட்டு | |
| 6. மரம் | 11. கல்லறை | |
| 9. மண்ணுலகிலும் | 12. இரண்டு | |
| 10. உண்ணக்கூடிய | 14. விண்ணுக்கும் | |
| 13. திராட்சை | 20. தீய | |
| 16. கூடாரங் | 24. யோனா | |
| 18. குரல் | 26. பின்பற்றிய | |



விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 62 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 40 பேர்

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

**முதலாம் பரிசு**

பே. அருள் றாஜ்
யேசுபுரம்,
கோமரசன் குளம்
வவுனியா.

**இரண்டாம் பரிசு**

அ. அருண்
தோட்டவெளி
மன்னார்.

**மூன்றாம் பரிசு**

யூ. பூபதி குரூஸ்
அரிப்பு,
முருங்கன்.

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 1ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 10 அதிஸ்ரசாலிகள்

1. தோமஸ் ஜஸ்மின்
திருக்குடும்ப
கன்னியர் மடம்,
தலவாக்கெல்லை.

2. வெ.தர்ஷினி குரூஸ்
தலைமன்னார் ஸ்ரேஷன்
தலைமன்னார்.

3. M. சிறில் றாஜ்
காகொல எஸ்ரேற்
அப்புத்தளை.

4. திருமதி எ. அற்புதராணி.
மீள்குடியேற்றத்திட்டம்,
தோட்டவெளி.

5. வே. அமல நாயகி
ஆவணம்,
நானாட்டான்.

6. அ. ஜெனிபர்
நொச்சிக் குளம்,
உயிலங்குளம்,
மன்னார்.

7. அ. யேசுறாஜன் டபறேறா
தரம் - 10, கற்கடந்தகுளம்,
முருங்கன்.

8.. P. பிளசிடா
திருக்குடும்ப கன்னியர்,
தியான இல்லம், நாகொட.

9 செ. நிக்ஷன்
முருங்கன் பிட்டி, முருங்கன்.

10. ம. ரவிந்திரன்
சிலுவை நகர், தலைமன்னார்

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 2 ற்கான விடைகளை ஆவணி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

ஆடி, 2002

## அமதி போதகர்கள் பற்றிய வரலாற்று நூல

அருட்பணியாளர் பிலிப் யேசுதாசன் (அ.ம.தி) அடிகளாரால் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த மறைபோதகர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் 5 புத்தகங்களாக தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 150 ஆண்டுகளாக (1848 - 1998) இலங்கை மண்ணில் வாழ்ந்து உழைத்து மறைந்து மண்ணோடு மண்ணாகிய 472 அமதி மறைபோதகர்களின் வரலாறுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஏறக்குறைய 300 பக்கங்களைக்கொண்ட ஒவ்வொரு புத்தகத்தினதும் விலை 300 ரூபா ஆகும்.

## இரசத்துக்கும் தடை

இந்தோனேசியாவில் திருப்பலியில் பயன்படுத்தப்படும் திராட்சை இரசத்தின் பாவனைக்கும் தடை வந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பாக அரசு கொண்டு வந்த மதுவிலக்குச் சட்டமே இந்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி மதுவை வைத்திருக்கும் எவரும் தண்டனைக்கு உள்ளாவார்கள். இச்சட்டத்தை மறு பரிசீலனை செய்யுமாறு திருச்சபை அரசைக் கேட்டுள்ள அதேவேளை இது அடிப்படைச் சட்டத்தில் தெரிவித்துள்ள மறைச் சுதந்திரத்தை மீறும் செயல் எனவும் திருச்சபை வர்ணித்துள்ளது. 180 மில்லியனுக்கும் அதிகமான இஸ்லாமியர் வாழும் இந்தோனேசியாவே உலகில் அதிகம் இஸ்லாமியர் வாழும் நாடாகும்.

### இன்றைய அரசியல் கள பின்னணியில்

# தமிழ்த் திருச்சபை தன் முதன்மைத் தேடல்கள்ல் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்!

### எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார்



இன்று எழுந்துள்ள அரசியல் கள மாற்றத்தின் பின்னணியில் தமிழ் திருச்சபையினர் தங்கள் முதன்மைத் தேடல்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என யாழ். மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வரும் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போது ஜேர்மனியில் இருந்து கொண்டு தமிழர்களின் உரிமைகளுக்காக சர்வதேச அரங்கில் குரல் கொடுப்பவருமான எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்தார். இந்தியாவிலிருந்து வெளிவரும் நியூ லீடர் (New Leader) என்ற கத்தோலிக்க ஆங்கில இதழுக்கு வழங்கிய பேட்டியின்போதே அடிகளார் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அப்பேட்டியின்போது மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது. "இலங்கைத் திருச்சபை ஐக்கியமான நாடு நோக்கி கூடுதல் பங்களிப்பை ஆற்ற வேண்டிய கட்டத்திலுள்ளது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## மறைக்கல்வி நூல் சாதனை படைக்கிறது

திருச்சபையின் புதிய மறைக்கல்விப் போதனைகளின் புத்தகம் உலகில் மிக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகங்களில் ஒன்றாக இப்போது மாறியுள்ளது. அண்மையில் பல்கேறிய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் இதுவரை 60 மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சைனம், ரஷ்யம், அராபியம், லிஸ்வேனியம், ஜோர்ச்சியம் உட்பட இதுவரை 60 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இப்புத்தகம், 90 இலட்சத்திற்கு மேற்பட்ட பிரதிகளை உலகில் கொண்டுள்ளது. 500 பக்கங்களையுடைய திருச்சபையின் மறைக்கல்விப் போதனைப் புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டு விசுவாச கோட்பாட்டு திருப்பேராயத்தின் அனுமதி பெற்ற பின்னரே வெளியிடப்படுகின்றது.

## யாழ். ஆயர் வெளிநாடு பயணம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் வெளிநாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். ஐரோப்பாவிலும் கனடாவிலும் உள்ள தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்களைச் தரிசிப்பதற்காகவே இவர் இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். இவரது இப்பயணம் ஆடிமாதம் 7ந்திகதி தொடக்கம் ஆவணி மாதம் முற்பகுதிவரை இடம்பெறும் என பாதுகாவலன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### யாழ். பத்திரிசியார் கல்லூரி அதிபர்

## பேனாட் அடிகளார் ஓய்வு பெற்றார்

கடந்த 10 ஆண்டுகளாக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய ஏ. ஜே. பேணாட் அடிகளார் தனது அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். வடபகுதியின் மாபெரும் இடம்பெயர்வு என்ற வர்ணிக்கப்படும் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின்போதும் அதன் பின்னர் நடந்த பல இடம்பெயர்வுகளின்போதும் கல்லூரியை கட்டுப்பாட்டுடன் கட்டிக்காத்த பெருமை இவரைச் சாரும்.

### வயோதிபத்தில் தள்ளாடும்

## திருத்தந்தை இராஜினாமா செய்யலாமா?



தற்போது திருத்தந்தை 2ம் அருள சின்னப்பர் சுகவீனமுற்று இருப்பது நமக்கு தெரிந்ததே. 1983ஆம் ஆண்டு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் அங்கீகாரம் பெற்று வெளியிடப்பட்ட திருச்சபைச் சட்ட புத்தகத்தின்படி திருத்தந்தையான ஒருவர் தானாக விரும்பினால் இராஜினாமா செய்யலாம் எனவும் அவ் இராஜினாமாவை இன்னுமொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (C 332,53) இதுவரையில் இதையிட்டு திருத்தந்தையிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை என்பதும் திருத்தந்தையின் வெளிநாட்டு விஜயங்கள், கனடாவில் உலக இளைஞர் தினச் சந்திப்பு உட்பட அனைத்தும் திட்டமிட்டபடியே நடக்கின்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. திருத்தந்தையின் உடல் நலனுக்காக செபிப்போம்.

## ஒலிநாடாவும் இசைக்குறிப்பும் விற்பனைக்கு

வணபிதா பிரான்சிஸ் யோசவ் அவர்களால் இசையமைக்கப்பட்ட நற்செய்திப் பாடல்கள் என்ற ஒலிநாடாவின் இசைக்குறிப்புக்களை எல். வி. அன்ரன் டயஸ் அண்மையில் வெளியிட்டுள்ளார். 10 வருடங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட பாடல்களைத் தொகுத்து நூல் வடிவம் கொடுக்கும் முயற்சியில் இவரின் பணி பாராட்டப்பட வேண்டியதாகும். நற்செய்திப் பாடல்கள் இசைநாடா 150 ரூபாவாகவும் இசைக்குறிப்பு நூல் 75 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

### மடுத் திருப்பதிக்கு யாத்திரையாக வரும் பக்தர்கள்

## நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகள்

**மிக முக்கியமானவை :-**

1. இந்த யாத்திரை ஒரு உல்லாசப் பயணமல்ல. சமாதானத்தையும், அருளையும் வேண்டி மக்கள் வரும் ஒரு புனிதமான யாத்திரையாகும்.

இது செபம், உளமாற்றம், ஒறுத்தல் முயற்சிகளுக்கு முக்கிய இடம் அளிக்கும் ஒரு பக்தியருட்சிக்குரிய திருயாத்திரையாகும். உங்கள் தேவைகளை அன்னையிடம் ஒப்படையுங்கள்.

**யாத்திரிகள் கவனிக்க வேண்டியன:**

1. நாளாந்தத் திருப்பலியில் பங்கு கொள்ளவும்.
2. தவறாது ஒப்புரவு அருட்சாதனத்தை (பாவசங்கீர்த்தனம்) பெற்றுக்கொள்ளவும்.
3. திவ்விய நற்கருணையை நாளாந்தம் உட்கொள்ளவும்.
4. வசதி கிடைக்கும்போதெல்லாம் தேவாலயத்திற்கு சமுகமளித்து திருச் செபமாலையை ஒப்புக்கொடுக்கவும்.
5. பொது வழிபாடுகளில் பங்கு கொள்ளவும்.
6. சிற்றாலயத்தில் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டுள்ளபடியால் குழுக்களாகவோ தனிப்பட்ட முறையிலோ அங்கு சென்று திருமணித்தியால வழிபாடுகளில் பங்குபற்றுக.
7. குடும்பங்களாக ஒன்று சேர்ந்து சிலுவைப் பாதையில் பங்குகொள்க.
8. தமது நேத்திக் கடன்களை செலுத்துவதற்காக திரளான மக்கள் வருகை தருவதனால் அன்னையின் பீடத்தண்டையில் அதிக நேரம் செலவிடாது ஏனையோரும் செபிக்க வழிவகை செய்க.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

### இறுதி யாத்திரையாகிவிட்ட உல்லாசப் பயணம்!

## யாழ். அடைக்கல மாதா பங்கைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களின் பரிதாப மரணம்

யாழ் அடைக்கல மாதா பங்கைச் சேர்ந்த 16 இளைஞர்கள் யுவதிகள் அருட்தந்தை பயஸ் அடிகளாருடன் தென்னிலங்கைக்கு சுற்றுலா சென்ற சமயம் அவர்களில் இருவர் ஆற்றில் மூழ்கி இறந்த பரிதாபச் சம்பவம் யாழ் திருச்சபையில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. 13. 05. 2002 அன்று றந்தனியா என்ற இடத்தில் ஓர் ஆற்றின் அருகே காலை உணவை உட்கொள்ள முன்னர் கோப்பைகளைக் கழுவ யூட் என்ற இளைஞரும் சாம்சன் என்ற இளைஞரும் ஆற்றுக்குள் சென்றனர். யூட்டின் சப்பாத்து சறுக்கவே அவர் நீரில் விழுந்தார். அவரைப் பிடித்துக் காப்பாற்ற முயற்சித்த சாம்சனும் நீரில் விழுந்தார். ஏனைய இளைஞர்கள் அவர்களைக் காப்பாற்றும் நோக்கில் ஓடி வந்தனர். தண்ணீருக்குள் முழ்கிக்கொண்டே யூட் "வேண்டாம் வேண்டாம்" என எச்சரித்தார். அதைத்தொடர்ந்து முற்றிலுமாக அவர் நீரில் மூழ்கி காணாமல் போய்விட்டார். யாழ்ப்பாண இளைஞர் யுவதிகளின் மரண ஓலம் கந்தவெட்டிய கிராமத்தையே அதிர வைத்தது. மனித சஞ்சாரம் குறைந்த அவ்விடத்தில் எவரையும் காணமுடியவில்லை. அருட்தந்தை பயஸ் ஊர் மக்களுக்கு இதுபற்றி தெரிவிக்க முயற்சிகளை மேற்கொண்டார். மொழி புரியாத காரணத்தால் அம்முயற்சி சிக்கலாகவே இருந்தது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## உதைபந்தாட்டம் விளையாடும் இயேசு



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிந்துள்ள இவ்வேளையில் இயேசுவும் புட்போல் விளையாடுகின்றாரா என்று நீங்கள் யோசிக்கலாம். மெக்சிக்கோ நகரின் பிரபல்யமான ஆலயம் ஒன்றில் இயேசு புட்போல் விளையாடும் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.

இலத்தின் அமெரிக்க நாடுகளில் உதைபந்தாட்ட வீரர்கள் தமது உதைபந்தாட்டத் திறமையை இறைவன் தந்த கொடையாகவே கருதுகிறார்கள். இயேசு விளையாட்டு மைதானத்திலும் தம்மோடு உள்ளார் என்பதை உணர்த்தும் விதமாக மெச்சிக்கோ நகரின் ஆலயத்தில் உள்ள படமே இதுவாகும்.

### அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட வவுனியா அமதி களின்

## அமைதியகக் கட்டிடத்தின் எழில் மிகு தோற்றம்



இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org